ISBN : 978-81-685205-7-8

செந்தமிழறிஞர்கள்:108



இரா பி சேதுப்பிள்ளை

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்




NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

தமிழின்பம்

(சாகித்திய அகாதமி விருது பெற்ற நூல்)

https://www.noolulagam.com/tamil-book/5044/tamil-inpam-book-type-tamilmozhi-by-ra-pee-sethupillai/



தமிழின்பம், ரா. பி. சேதுப்பிள்ளை எழுதிய தமிழின் பெருமையைப் பல்வேறு நிலைகளில் விளக்கும் நூலாகும்.

அமைப்பு

இந்நூலில் 1. மேடைப்பேச்சு, 2. இயற்கை இன்பம், 3. காவிய இன்பம், 4. கற்பனை இன்பம், 5. அறிவும் திருவும், 6. மொழியும் நெறியும், 7. இருமையில் ஒருமை, 8. பாரதியார் பாட்டின்பம் என்ற எட்டுத்தலைப்புகளின் கீழ் 40 கட்டுரைகளில் தமிழ் மொழியின் பெருமைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

உள்ளடக்கம்

1. **மேடைப் பேச்சு**
    1. தமிழாசிரியர் மகாநாடு
    2. புறநானூறு மகாநாடு
    3. வேளாளப் பெருமக்கள் மகாநாடு
    4. தமிழ்த்திருநாள்
    5. தமிழ் இசை விழா
2. **இயற்கை இன்பம்**
    1. பொங்கலோ பொங்கல்
    2. சித்திரை பிறந்தது
    3. தமிழ்த் தென்றல்
    4. திருக்குற்றாலம்
    5. பழகு தமிழ்
3. **காவிய இன்பம்**
    1. காதலும் கற்பும்
    2. கண்ணகிக் கூத்து
    3. சிலம்பின் காலம்
    4. அமுத சுரபி
    5. மாதரும் மலர்ப் பொய்கையும்
4. **கற்பனை இன்பம்**
    1. முருகனும் முழுமதியும்
    2. பயிர் வண்டும் படர் கொடியும்
    3. நல்ல மரமும் நச்சு மரமும்
    4. சிவனடியார் முழக்கம்
    5. சரம கவிராயர்
5. **அறிவும் திருவும்**
    1. காயும் கனியும்
    2. சேரனும் கீரனும்
    3. பாரியும் மாரியும்
    4. அழகும் முத்தும்
    5. வண்மையும் வறுமையும்
6. **மொழியும் நெறியும்**
    1. தமிழும் சைவமும்
    2. தமிழும் சாக்கியமும்
    3. இறையவரும் இன்னுயிரும்
    4. சோலைமலைக் கள்ளன்
    5. தெய்வம் படும் பாடு

7. இருமையில் ஒருமை
1. ஆண்மையும் அருளும்
2. கர்ணனும் கும்பகர்ணனும்
3. காளத்தி வேடனும் கங்கை வேடனும்
4. பாரதப் பண்பாடு
5. இருமலையும் தமிழ் மலையே
8. பாரதியார் பாட்டின்பம்
1. செந்தமிழ் நாடு
2. முப்பெரும் கவிஞர்
3. கலையின் விளக்கம்
4. பண்டாரப் பாட்டு
5. தமிழ்த் தாய் வாழ்த்து


ரா.பி. சேதுப்பிள்ளை

ஒரு கண்ணோட்டம்

https://tamil.wiki/wiki/%E0%AE%B0%E0%AE%BE.%E0%AE%AA%E0%AE%BF._%E0%AE%9A%E0%AF%87%E0%AE%A4%E0%AF%81%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%BF%E0%AE%B3%E0%AF%8D%E0%AE%B3%E0%AF%88

@@@@@@@@@@@@@@@@@@@

ரா.பி. சேதுப்பிள்ளை (மார்ச் 2, 1896 - ஏப்ரல் 25, 1961) தமிழறிஞர், எழுத்தாளர், வழக்கறிஞர், மேடைப்பேச்சாளர், சொற்பொழிவாளர். சாகித்ய அகாடமி விருது பெற்ற முதல் தமிழ் நூலின் ஆசிரியர்.



பிறப்பு, கல்வி

ரா.பி. சேதுப்பிள்ளை (ராஜவல்லிபுரம். பி. சேதுப்பிள்ளை) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம் இராஜவல்லிபுரத்தில் மார்ச் 2, 1896-ல் பிறவிப்பெருமாள் பிள்ளை - சொர்ணம்மாள் தம்பதியினருக்கு பதினோராவது குழந்தையாகப் பிறந்தார். உள்ளூர்த் திண்ணைப் பள்ளியில் தமிழ் நீதி நூல்களைக் கற்றார். இராஜவல்லிபுரம் செப்பறைத் திருமடத் தலைவர் அருணாசல தேசிகரிடம் மூதுரை, நல்வழி, நன்னெறி, நீதிநெறி விளக்கம், தேவாரம், திருவாசகம் ஆகியவற்றைக் கற்றார். தொடக்கக் கல்வியைப் பாளையங்கோட்டை தூய சேவியர் உயர்நிலைப் பள்ளியிலும், இடைநிலை வகுப்பை திருநெல்வேலி இந்துக் கல்லூரியிலும், இளங்கலை படிப்பை சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலும் படித்தார். பின்னர் இளங்கலை சட்டம் படித்தார். உயர்நிலைப் பள்ளியின் தமிழாசிரியர் சுப்பிரமணியம், இந்துக் கல்லூரித் தமிழாசிரியர் சிவராமன் ஆகியோர் சேதுப்பிள்ளையின் தமிழார்வத்தை வளர்த்தவர்கள்.

தனிவாழ்க்கை

இளங்கலைப் படிப்பை முடித்தவுடன் பச்சையப்பன் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். பணியிலிருந்துகொண்டே சட்டப்படிப்பு முடித்த சேதுப்பிள்ளை சென்னையில் நீதிக்கட்சி பிரமுகர்களில் ஒருவரான முத்தையா முதலியாரிடம் வழக்கறிஞர் தொழில் பயின்றார். 1923 முதல் திருநெல்வேலியில் வழக்கறிஞராகப் பணியாற்றினார். சிறிது காலம் அரசியலில் ஈடுபட்டிருந்த சேதுப்பிள்ளை 1926 முதல் 1928 வரையிலும் 1928 முதல் 1930 வரையிலும் திருநெல்வேலியின் நகர்மன்ற உறுப்பினராக தேர்வுசெய்யப்பட்டார். திருநெல்வேலி நகர்மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். கா.சுப்ரமணிய பிள்ளையின் அழைப்பின் பேரில் அண்ணாமலை பல்கலைக்கழக தமிழ்த் துறையில் விரிவுரையாளராக சுவாமி விபுலானந்தர் சோமசுந்தர பாரதியார் ஆகிய புலவர்களின் தலைமையில் ஆறு ஆண்டுகள் (1930-1936) பணிபுரிந்தார். 1936 முதல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராக 25 ஆண்டுகள் பணியாற்றினார். எஸ். வையாபுரிப் பிள்ளை தொகுத்து வந்த தமிழ்ப் பேரகராதிப் பணியில் சேதுப்பிள்ளையும் பங்காற்றியுள்ளார். எஸ். வையாபுரிப் பிள்ளையின் ஓய்வுக்குப்பின் சேதுப்பிள்ளை தமிழ்த்துறைத் தலைவராகி (1946-1951) பேரகராதி தொகுப்புப் பணியை ஏற்றார். மனைவி ஆழ்வார் ஜானகி. அவர்களுக்குக் குழந்தைகளில்லை. ரா.பி.சேதுப்பிள்ளை செல்வ வளம் மிக்க வாழ்க்கையை வாழ்ந்தவர். தன் மறைவுக்குப்பின் உடைமைகளை அறக்கட்டளைகளுக்கு

அளித்தார். சென்னை காந்திநகரில் இருந்த இல்லம், கண்டியபப்பேரி என்னும் ஊரிலிருந்த நிலங்கள் ஆகியவற்றை அறக்கட்டளைக்கு வழங்கினார். ராஜவல்லிபுரத்தில் இருந்த நிலங்களையும் வீட்டையும் ஊராட்சிமன்றத்திற்கு வழங்கினார். ரா.பி.சேதுப்பிள்ளை அறக்கட்டளைக்கு அறங்காவலராக நீதிபதி மகாராஜன் நியமிக்கப்பட்டார்.

சொற்பொழிவாளர்

சேதுப் பிள்ளை இளமையிலேயே சொற்பொழிவாற்றும் திறன் கொண்டிருந்தார். நெல்லையில் மாணவர் மன்றம் என்னும் அமைப்பை வீரபத்ர பிள்ளை என்பவர் நடத்திவந்தார். அவருடைய கோரிக்கைக்கு ஏற்ப சேதுப்பிள்ளை திருக்குறள் பற்றி ஒரு தொடர் சொற்பொழிவை ஆற்றினார். தொடர்ந்து அங்கே வாரந்தோறும் தமிழிலக்கியங்கள் பற்றி சொற்பொழிவுகளை ஆற்றினார்.

1921-ல் திருநெல்வேலியில் டி.கே.சிதம்பரநாத முதலியார் கம்பன் கழகம் அமைப்பை தொடங்கினார். அங்கே கம்பராமாயண உரைகள் நடைபெற்றன. அவற்றை கேட்டும்கூட சேதுப்பிள்ளையின் உள்ளம் அதில் ஈடுபாடு கொள்ளவில்லை. சுப்பையா முதலியார் என்பவர் கம்பனைப் பற்றி பேசும்போது 'வெள்ளெருக்கஞ்ச் சடைமுடியான், வெற்பெடுத்த திருமேனி...' என தொடங்கும் பாடலை கேட்டபின் கம்பராமாயணம் மீது ஆர்வம் கொண்டார். சுப்பையா பிள்ளையிடம் கம்பன் கவிநயத்தை பாடம் கேட்டபின் கம்பராமாயணச் சொற்பொழிவுகள் ஆற்றத்தொடங்கினார்.

சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பணியாற்றும்போது சிதம்பரம் ஆலயத்தில் பன்னிரு திருமுறைகளைப் பற்றி புகழ்பெற்ற தொடர் சொற்பொழிவுகளை ஆற்றினார். 1955-ல் நடைபெற்ற குடமுழுக்கு விழாவில் ரா.பி.சேதுப்பிள்ளை பேசிய உரை புகழ்பெற்ற ஒன்று.

சென்னை ஒய்.எம்.சி.ஏ. அரங்கத்தில் மூன்றாண்டுகள் கம்பராமாயணச் சொற்பொழிவு ஆற்றினார். அச்சொற்பொழிவின் தாக்கத்தால் சென்னை மாநகரில் கம்பர் கழகம் நிறுவப்பட்டது. சென்னையிலுள்ள கோகலே மன்றத்தில் சிலப்பதிகார வகுப்பைத் தொடர்ந்து மூன்றாண்டுகள் நடத்தினார். தங்கச்சாலை தமிழ்மன்றத்தில் ஐந்தாண்டுகள் (வாரம் ஒருநாள்) திருக்குறள் விளக்க சொற்பொழிவாற்றினார். கந்தகோட்டத்து மண்டபத்தில் ஐந்தாண்டுகள் கந்தபுராண விரிவுரை நிகழ்த்தினார்.

தமிழின் மேடையுரையின் முன்னோடியான ஞானியார் அடிகள்,
பெரும்பேச்சாளர்களான திரு. வி. கல்யாணசுந்தரனார், மறைமலை அடிகள்

போன்றவர்களின் நீட்சியே ரா. பி. சேதுப்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார் முதலியவர்கள்.

இலக்கிய வாழ்க்கை

ரா.பி. சேதுப்பிள்ளை முதன்மையாக இலக்கிய ஆய்வு, சொல்லாய்வு ஆகியவற்றில் ஈடுபட்டவர். தமிழில் மறந்து விட்ட பிறசொற்களை விலக்குவது, தமிழின் தூய சொற்களை புழக்கத்திற்குக் கொண்டு வருவது, தமிழில் புதிய கலைச் சொற்களை உருவாக்குவது ஆகிய பணிகளின் முன்னோடி, வழிகாட்டியான மறைமலை அடிகளை பின்பற்றி பரிதிமாற்கலைஞர், ரா. பி. சேதுப்பிள்ளை, திரு.வி. கல்யாணசுந்தரனார் போன்றவர்கள் செயல்பட்டார்கள். சேதுப்பிள்ளையின் முயற்சியினால் திராவிடப் பொதுச்சொற்கள், திராவிடப் பொதுப்பழமொழிகள் ஆகிய இரு நூல்களை சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டது.

சேதுப்பிள்ளையின் முதல் கட்டுரை நூல் 'திருவள்ளுவர் நூல் நயம்'. சேதுப்பிள்ளை தனது ஆராய்ச்சி அனுபவங்களைக் கொண்டு எழுதிய உரைநடை நூல் "தமிழகம் ஊரும் பேரும்".

ரா.பி.சேதுப்பிள்ளையின் தமிழ் இன்பம் நூல் மலேசிய அரசாங்கத்தால் தமிழ் மொழி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ் மொழி இலக்கணத்துறையில் ஒரு பாட நூலாக சேர்க்கப்பட்டிருந்தது (1990 - 1998).

ரா.பி. சேதுப்பிள்ளை பதினான்கு கட்டுரை நூல்கள், மூன்று வாழ்க்கை வரலாற்று நூல்கள் உட்பட 21 நூல்கள் எழுதியுள்ளார். நான்கு நூல்களை பதிப்பித்துள்ளார்.

சேதுப்பிள்ளையின் நூல்களுள் பல தமிழக வானொலி நிலையங்களிலும் இலக்கிய அமைப்புகளில் ஆற்றிய இலக்கியச் சொற்பொழிவுகளின் தொகுப்புக்களாகவும் அமைந்தவை. எனவே உரைநடை மேடைப் பேச்சின் இயல்பினில் அமைந்ததாகவே நூல்கள் இருக்கும்.செய்யுளுக்கு என்றே கருதப்பட்ட அடுக்குமொழி, எதுகை, மோனை, இலக்கியத் தொடர் ஆகியவற்றை உரைநடையிலும் கொண்டுவந்தவர். தருமபுர ஆதீனத்தால் சொல்லின் செல்வர் என்றும், சுத்தானந்த பாரதியால் 'செந்தமிழுக்குச் சேதுப்பிள்ளை' என்றும் போற்றப்பட்டார்.

ரா.பி.சேதுப்பிள்ளை டி.கே.சிதம்பரநாத முதலியாருக்கு அணுக்கமானவர். அ.சீனிவாசராகவன், நீதிபதி மகாராஜன், மீ.ப.சோமு போன்றவர்களுக்கு அணுக்கமானவராக இருந்தார்.

சேதுப்பிள்ளையின் நூல்கள் 2008-ல் நாட்டுடைமையாக்கப்பட்டன.

விருதுகள்

- தருமபுரம் ஆதீனம் (1950) சொல்லின் செல்வர் பட்டம்
- சாகித்ய அகாடமி (1955) - 'தமிழின்பம்' சாகித்ய அகாடமி விருது பெற்ற முதல் தமிழ் நூல்
- சென்னை பல்கலைக்கழகம் (1957) டி.லிட் (இலக்கியப்பேரறிஞர்)

மறைவு

ரா.பி. சேதுப்பிள்ளை ஏப்ரல் 25, 1961-ல் தனது 65-வது வயதில் மறைந்தார்.

(😊)(😊) ஒஒஒஒஒஒ (😊)(😊)

'சொல்லின் செல்வர்'

இரா.பி. சேதுப்பிள்ளை

பி.தயாளன்

பிரிவு: தமிழ்நாடு

வெளியிடப்பட்டது: 01 அக்டோபர் 2015

https://www.keetru.com/index.php/2018-01-12-05-57-50/2014-03-08-04-39-26/2014-03-14-11-17-85/29273-2015-10-01-08-15-27

சொல்லோடு சொல்லையும் கருத்தோடு கருத்தையும் ஒப்பு நோக்கி, சுவையும் பயனும் காணும் ஒப்பாராய்ச்சித் திறன் பெற்றவர். தனது மேடைப் பேச்சு மூலம் தமிழ் உணர்ச்சியையும், தமிழ் அறிவையும் பட்டி தொட்டியெல்லாம் பரப்பியவர். தனித்தமிழ் நடையில் கட்டுரைகள் வரைந்து தமிழ் உலகுக்குப் பெருமை சேர்த்தவர். "அருமையான தமிழ்ச்சொல் இருக்க, ஆங்கிலத்தை எடுத்தாளுதல் அறிவீனம் அல்லவா? கரும்பிருக்க இரும்பைக் கடிப்பார் உண்டோ?" என தாய்மொழி தமிழின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டவர். 'செந்தமிழுக்குச் சேதுப்பிள்ளை' எனத் தமிழ் அறிஞர்களால் போற்றப்பட்டவர். மொழி ஆராய்ச்சித் துறையில் புதுத் திருப்பத்தையும், மேம்பாட்டையும் அளித்தவர். அவர்தான் 'சொல்லின் செல்வர்' எனப் போற்றப்படும் பேராசிரியர் இரா.பி. சேதுப்பிள்ளை ஆவார்.

திருநெல்வேலிக்கு அருகில் உள்ள இராசவல்லிபுரம் என்னும் ஊரில், பெருமாள்பிள்ளை – சொர்ணம்மாள் தம்பதியினருக்கு பன்னிரெண்டாவது பிள்ளையாக 1896 ஆம் ஆண்டு பிறந்தார். இராசவல்லிபுரம் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் ஆரம்பக் கல்வி கற்றார். 5 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பாளையங்கோட்டை சேவியர் உயர்நிலைப்பள்ளியிலும், புகுமுக வகுப்பின் இரண்டாண்டு படிப்பை திருநெல்வேலி இந்துக் கல்லூரியிலும், இளங்கலை படிப்பை சென்னை பச்சையப்பர் கல்லூரியிலும் பயின்று தேர்ச்சி பெற்றார்.

மாணவர் பருவத்திலேயே தமிழ்த் தேர்வுகளிலும், தமிழ்ப் பேச்சுப் போட்டிகளிலும், தமிழ் வளர்ச்சித் தொண்டிலும் தலைசிறந்து விளங்கினார். இவரது பேச்சாற்றலைக் கண்டு வியந்த பச்சையப்பர் கல்லூரி தமிழ்த் துறைப் பேராசிரியர் திருமணம் செல்வகேசவராயர், அதே கல்லூரியில் சிற்றாசிரியராக பணிபுரிய வாய்ப்பை ஏற்படுத்தி நல்கினார். கல்லூரியில் பணிபுரிந்து கொண்டே சென்னை சட்டக் கல்லூரியில் சேர்ந்து சட்டக் கலை பயின்றார்.

திருநெல்வேலிக்குச் சென்று, தமிழகத்தின் முன்னாள் மாநில அமைச்சரும், புகழ் பெற்ற வழக்கறிஞருமான எஸ்.முத்தையா முதலியாரிடம் பயிற்சி பெற்றார். வழக்கறிஞர் தொழிலில் பெரும் புகழுடன் விளங்கினார்.

நெல்லை நகர மக்கள் அவரது பொது நலத்தொண்டைப் பார்த்து, நெல்லை நகர் மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தனர். அவர் அந்நகராட்சியின் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். தமது இருபத்து மூன்றாம் வயதிலேயே இப்பொறுப்புகளை ஏற்றுச் சிறப்புடன் செயலாற்றினார்.

இவரது தமிழ்ப் புலமையை அறிந்த அண்ணாமலை பல்கலைக்கழகத்தார், தமிழ் விரிவுரையாளராக அமர்த்தினர். இவர் பேராசிரியர் கா.சு.பிள்ளை, விபுலானந்த அடிகளார், நாவலர் சோமசுந்தர பாரதியார் முதலிய தமிழறிஞர்கள் தலைமையில் ஆறு ஆண்டுகள் அருந்தமிழ்ப் பணியாற்றினார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1936 ஆம் ஆண்டு, தலைமைத் தமிழ் விரிவுரையாளராக பணியில் சேர்ந்தார். அப்போது தமிழ்த் துறை தலைவராக விளங்கிய எஸ். வையாபுரிபிள்ளை அவர்களுடன் இணைந்து சென்னை பல்கலைக்கழகத்தின் சார்பில் தமிழ்ப் பேரகராதியின் இணைப்புத் தொகுதியை முடித்து வெளியிட அரும்பாடுபட்டார். உள்நாட்டு – அயல்நாட்டு ஆராய்ச்சி மாணவர்களுக்கு வழிகாட்டியாக விளங்கினார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் கிழக்கு நாடுகள் கலை ஆய்வு மலரில் ஆங்கிலத்தில் ஒன்பது ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், தமிழில் இரண்டு ஆராய்ச்கிக் கட்டுரைகளையும் எழுதி தமிழுக்குப் பெருமை சேர்த்தார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1955-ம் ஆண்டு நடைபெற்ற அனைத்திந்திய கீழை நாடுகள் கலை ஆராய்ச்சி மாநாட்டுக்கு தலைமை தாங்கி அவர் ஆற்றிய பேருரை சென்னைப் பல்கலைக்கழக வெளியீடாக வரப்பெற்றது. தமிழ் கலைக் களஞ்சியத்தில் கட்டுரைகள் வரைந்து கலைக் களஞ்சியம் வெளிவர தனது உழைப்பை நல்கினார்.

தமிழில் சுருக்க அகராதி தயாரித்தல், மொழி இலக்கியம் நலம் கருதி நிபுணர் குழுக்களில் இடம் பெற்று தொண்டாற்றுதல், கல்லூரி மாணவர்களுக்கு தமிழ் சிறப்பு வகுப்பு நடத்துதல், தென்னாட்டுப் பல்கலைக் கழகங்களில் தமிழ்த்துறை செழிக்கப் பாடுபடுதல், முதலிய பணிகளை தனது வாழ்நாள் பணியாக ஆற்றி வந்தார்.

'தமிழ் பேசுவது தாழ்வு', 'தமிழில் உரையாற்றுவது இழிவு' என்று அந்நாளிலிருந்த சூழ்நிலையைப் பேராசிரியர் இரா.பி.சேதுப்பிள்ளை தமது மிடுக்கான பேச்சால் மாற்றியமைத்தார். 'கம்ப இராமயணச் சொற்பொழிவுகள்', 'சிலப்பதிகாரச் சொற்பொழிவுகள்' , 'கந்தபுராணச் சொற்பொழிவுகள்', 'திருக்குறள் சொற்பொழிவுகள்' முதலிய சொற்பொழிவுகளை நிகழ்த்தி தமிழுக்குப் பெருமை சேர்த்தார்.

"நன்றாக எழுதப்பட்ட ஒரு வாழ்க்கை வரலாறு, நன்றாக வாழ்ந்த ஒரு வாழ்க்கையைப் போன்று அரியது. படிப்பதற்கு மிகவும் இன்பமும், பயனும் பயக்க வல்லது வாழ்க்கை வரலாறு" என்று அறிஞர் கார்லைல் கூறியது போல, பேராசிரியர் இரா.பி. சேதுப்பிள்ளை,'தமிழ்நாட்டு நவமணிகள்' என்ற தமது நூலில் ஆதிரையார், விசாகையார், மருதியார், கோப்பெருந்தேவியார், மணிமேகலையார், கண்ணகியார், புனிதவதியார், மங்கையர்க்கரசியார், திலகவதியார் ஆகிய ஒன்பதின்மர் வாழ்க்கை வரலாறுகளைச் சுருக்கி தமிழுலகுக்கு அளித்துள்ளார்.

"உண்மையாகவே ஒரு நூலின் அடையாளம் என்பது, அது புதியதாகவும், எதையாவது சொல்வதாயும் அமைய வேண்டும். அப்படிச் சொல்வதையும், புதிய முறையிலும் தனக்கே உரிய நடையிலும் சொல்ல வேண்டும்" - என பேரறிஞர் ஹட்சன் இலக்கிய நூலின் தன்மை குறித்துக் கூறியுள்ளார். அந்த கோட்பாட்டின் அடிப்படையில் தனது வாழ்நாள் பணியாக 'ஊரும் பேரும்' என்ற அரிய நூலை தமிழுலகுக்கு அளித்துள்ளார். அந்த நூலில் ஆயிரத்து முன்னூற்றுக்கும் மேற்பட்ட ஊர்களின் பெயர்களையும் ஆராய்ந்து விளக்கியுள்ளார். மேலும், அந்த நூலில், நிலம் - மலை – காடு – வயல் – ஆறு – கடல் – நாடு – நகரம் - குடி – படை – குலம் - கோ – தேவு – தலம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்து ஊர் பெயர் ஆராய்ச்சியை நிகழ்த்தியுள்ளார். அந்த நூலில் அவர் தந்துள்ள குறிப்புகள்

தமிழ் வரலாற்று உலகுக்கு, பெரு விருந்தாகும் என பேராசிரியர் ந. சஞ்சீவி புகழ்ந்துரைத்துள்ளார்.

“நடை என்பது ஒரு ஆசிரியன் அணியும் ஆடையன்று. அது அவன் உடலோடு ஒட்டிய தோலேயாகும்” என்று மேல்நாட்டு அறிஞர் கார்லைல் கூறியது போல பேராசிரியர் இரா.பி. சேதுப்பிள்ளை எளிய தமிழ் நடையில், இலக்கிய செய்திகளையும், ஆராய்ச்சி முடிவுகளையும் தமிழர்களுக்குப் புலப்படுத்தும் வண்ணம் தமது கட்டுரைகளை அளித்துள்ளார்.

“உரையாடல் இழிநகையற்ற இனிமையுடையதாய், செயற்கையற்ற சதுரப்பாடுடையதாய், தாழ்வற்ற தாராளமுடையதாய், கரவற்ற கல்வி நலமுடையதாய், பொய்மையற்ற புதுமை உடையதாய் இருத்தல் வேண்டும்” என உரையாடல் கலைபற்றி இலக்கிய மேதை ஷேக்ஸ்பியர் கூறியுள்ளதை மனதில் கொண்டு, பேராசிரியர் இரா.பி. சேதுப்பிள்ளை தனது நூல்களைப் படைத்துள்ளார்.

‘தமிழ்நாட்டு நவமணிகள்’, ‘திருவள்ளுவர் நூல்நயம்’, ‘சிலப்பதிகார விளக்கம்’, ‘கால்டுவெல் ஐயர் சரிதம்’, ‘வேலும் வில்லும்’, ‘வழிவழி வள்ளுவர்’ , ‘அலையும் கலையும்’, ‘தமிழர் வீரம்’, ‘வேலின் வெற்றி’, ‘கடற்கரையிலே’, ‘திருக்காவலூர் கோவில்’, ‘கம்பன் கவிநயம்’, ‘சிலப்பதிகார நூல்நயம்’, ‘சொற்களும் அவற்றின் பொருட்சிறப்பும்’, ‘தமிழ் இன்பம்’, ‘இலக்கியத் தமிழும் பேச்சுத் தமிழும்’ முதலிய முப்பதிற்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்தளித்துள்ளார்.

‘குமரன்’, ‘ஆனந்தபோதினி’ முதலிய இதழ்களில் இருநூறுக்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார், அக்கட்டுரைகள் தமிழார்வத்தையும், நாட்டுப்பற்றையும், மொழிப்பற்றையும் ஊட்டுவதாக அமைந்துள்ளன. மேலும் அவரது கட்டுரைகள் தமிழாராய்ச்சிக்குத் தூண்டுகோலாக விளங்குகின்றன. பேராசிரியர் இரா.பி. சேதுப்பிள்ளை இருபதாம் நூற்றாண்டு தமிழ் உரைநடையில் கட்டுரைக் கலைக்கு பெரும் வாழ்வு நல்கியவரென்று போற்றப்படுகிறார்.

‘கந்தபுராணத் திரட்டு’, ‘பாரதியார் இன்கவித் திரட்டு’, ‘செஞ்சொற் கவிக்கோவை’, ‘தமிழ்க் கவிதைக் களஞ்சியம்’, முதலிய நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.
தனித்தமிழின் இனிமையையும், ஏற்றத்தையும் மெய்ப்பித்து அரை நூற்றாண்டு காலம் தமிழ் மொழி வளர்ச்சிக்காக தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்தவர்.

இவரது பேச்சாற்றலைப் போற்றி தருமையாதீனம் 1950-ஆம் ஆண்டு ‘சொல்லின் செல்வர்’ என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது. தமிழ் எழுத்தாளர் சங்கம் 1954-ஆம் ஆண்டு இவரது தமிழ்த்தொண்டைப் பாராட்டி கேடயம் வழங்கிச் சிறப்பித்தது. தமிழ் வளர்ச்சிக் கழகம் ‘ஊரும் பேரும்’ என்ற நூலுக்கு சிறந்த

ஆராய்ச்சி நூலுக்கான பரிசளித்தது. 1955-ஆம் ஆண்டு சாகித்திய அகாதமி 'தமிழின்பம்' என்ற நூலுக்கு விருது வழங்கிச் சிறப்பித்தது.

சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழாவின்போது,

' இலக்கியத் துறைப் பேரறிஞர்'

என்னும் பட்டம் வழங்கி பாராட்டப்பட்டார்.

செந்தமிழ் பேச்சுக்கும், செந்தமிழ் எழுத்துக்கும் மட்டுமின்றி செந்தமிழ் வாழ்வுக்குமே தனது வாழ்நாள் முழுவதும் தொண்டாற்றிய பேராசிரியர் இரா.பி. சேதுப்பிள்ளை 1961-ஆம் ஆண்டு தமது அறுபத்தைந்தாவது வயதில் இவ்வுலகை விட்டு மறைந்தார். அவர் மறைந்தாலும், தமிழர் நெஞ்சில் என்றென்றும் தமிழ் மணக்க வாழ்ந்திருப்பார்.

UNIVERSITY OF MADRAS

Dr. R. P. Sethu Pillai Silver Jubilee Commemoration Endowment lectures

1968-69

Literary Beauties in the Hymns of Nayanmars Alwars and other saints.

By
P. ALALASUNDARAM, M.A
Professor
U. G. C. Project for Teaching and Research
Head of the Department of Tamil
Madras Christian College, Tambaram.

செந்தமிழ்சிற்பிகள்

'சொல்லின் செல்வர்' இரா. பி. சே. (1896-1961)

https://www.annacentenarylibrary.org/pages/view/72.%20'%E0%AE%9A%E0%AF%8A%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%B2%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%8D%20%E0%AE%9A%E0%AF%86%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%B5%E0%AE%B0%E0%AF%8D'%20%E0%AE%87%E0%AE%B0%E0%AE%BE.%E0%AE%AA%E0%AE%BF.%E0%AE%9A%E0%AF%87._1896

@@@@@@



அறிமுகம்

ரா.பி. சேதுப்பிள்ளை (மார்ச் 2, 1896 - ஏப்ரல் 25, 1961) ஒரு தமிழறிஞர், எழுத்தாளர், வழக்குரைஞர், மேடைப்பேச்சாளர். இவர் தமிழில் சொற்பொழிவு ஆற்றுவதிலும், உரைநடை எழுதுவதிலும் மிகவும் பெயர்

பெற்றவர். இனிய உரைச் செய்யுள் எனக் குறிப்பிடும் அளவுக்கு அவரது உரைநடை இனிமை வாய்ந்தது எனப் பலரும் பாராட்டியுள்ளனர். உரைநடையில் அடுக்குமொழியையும், செய்யுள்களுக்கே உரிய எதுகை, மோனை என்பவற்றையும் உரைநடைக்குள் கொண்டு வந்தவர் இவரே எனப்படுகின்றது.

சேதுப்பிள்ளை தமிழ்நாட்டில் உள்ள திருநெல்வேலியில் இராசவல்லிபுரம் என்ற ஊரில் 1896-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 2-ஆம் நாள் பிறவிப்பெருமான்பிள்ளை - சொர்ணம்மாள் ஆகியோருக்கு மகவாகப் பிறந்தார். கார்காத்த வேளாளர் குலத்தில் சேது பிறந்தார். சேதுக்கடலாடி இராமேசுவரத்திலுள்ள இறைவனைப் பூசித்ததனால் பிறந்த தம் மகனுக்குச் சேது என்று பெயர் சூட்டினர். இரா.பி. சேதுப்பிள்ளையின் முன்னெழுத்துகளாக அமைந்த 'இரா' என்பது இராசவல்லிபுரத்தையும் 'பி' என்பது 'பிறவிப்பெருமான்பிள்ளை' அவர்களையும் குறிப்பன.

1936-இல் சென்னைப் பல்கலைக் கழகம் சேதுப்பிள்ளையைத் தமிழ்ப் பேராசிரியராக அமர்த்தியது. 25 ஆண்டுக் காலம் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றிய சேதுப்பிள்ளை தம் எழுத்தாலும் பேச்சாலும் தமிழுக்குப் பெருமையும் தமிழ் உரைநடைக்குச் சிறப்பையும் சேர்த்தார். அந்நாளில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சித் துறைத் தலைவராகப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை பணியாற்றி வந்தார். வையாபுரிப்பிள்ளை தொகுத்து வந்த தமிழ்ப் பேரகராதிப் பணி நிறைவேற சேதுப்பிள்ளை துணை நின்றார். வையாபுரிப்பிள்ளையின் ஓய்வுக்குப் பின் இவர் தலைமைப் பதவியை ஏற்றார். அப்போது பச்சையப்பன் கல்லூரி, மாநிலக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் மாணவர்களுக்குச் சிறப்பு வகுப்புகள் நடத்தினார். ஆராய்ச்சி மாணவர்களுக்கு வழிகாட்டியாகத் துணைநின்று உதவினார். இவரின் முயற்சியினால், திராவிடப் பொதுச்சொற்கள்,

திராவிடப் பொதுப்பழமொழிகள் ஆகிய இரு நூல்களைச் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டது.

சேதுப்பிள்ளையின் 'தமிழின்பம்' என்னும் நூலுக்கு இந்திய அரசு அளிக்கும் சாகித்ய அக்காதமியின் பரிசு 1955-ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. இலக்கிய அமைப்புகளும் அறிஞர் பெருமக்களும் சேதுப்பிள்ளையின் தமிழுக்குத் தங்கள் பாராட்டுகளைத் தெரிவித்த வண்ணம் இருந்தனர். கவியோகி எனப் போற்றப்படும் சுத்தானந்த பாரதியார் இரா.பி. சேதுப்பிள்ளையைச் "செந்தமிழுக்குச் சேதுப்பிள்ளை" என்று அழைத்துப் பாராட்டினார். மேலும் உரைநடையில் தமிழின்பம் நுகரவேண்டுமானால் சேதுப்பிள்ளை செந்தமிழைப் படிக்க வேண்டும் என்பார்.

இவர் எழுதிய முதல் கட்டுரை நூல் "திருவள்ளுவர் நூல் நயம்" என்பதாகும். படைத்த உரைநடை நூல்களுள் தலை சிறந்ததாகவும் வாழ்க்கைப் பெருநூலாகவும் விளங்குவது, "தமிழகம் ஊரும் பேரும்" என்பதாகும். இந்நூல் அவரின் முதிர்ந்த ஆராய்ச்சிப் பெருநூலாகவும், ஒப்பற்ற ஆராய்ச்சிக் கருவூலமாகவும் திகழ்கிறது. மேலும்,

சிலப்பதிகார நூல்நயம்
தமிழின்பம்
தமிழ்நாட்டு நவமணிகள்
தமிழ் வீரம்
தமிழ் விருந்து
வேலும் வில்லும்
வேலின் வெற்றி
வழிவழி வள்ளுவர்
ஆற்றங்கரையினிலே
மிழ்க் கவிதைக் களஞ்சியம்
செஞ்சொற் கவிக்கோவை
பாரதியார் இன்கவித்திரட்டு

போன்ற நூல்கள் இவரின் படைப்புகளாகும்.

நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்

1. ஆற்றங்கரையினிலே (நூல்)
2. கடற்கரையினிலே (நூல்)
3. கிருஸ்தவத் தமிழ்த் தொண்டர் (நூல்)
4. தமிழ் விருந்து (நூல்)
5. தமிழகம் ஊரும் பேரும்
6. தமிழர் வீரம்
7. தமிழின்பம்
8. மேடைப் பேச்சு (நூல்)
9. வேலின் வெற்றி (நூல்)

இந்நூல்களை வாசிக்க கீழ்க்கண்ட இணையதளத்தினை அனுகவும்:

https://www.tamilvu.org/ta/library-nationalized-html-naauthor-39-235694

தமிழ் இணையக் கல்விக்கழகம்

TAMIL VIRTUAL ACADEMY

சேதுப்பிள்ளை உரைநடையில்

இலக்கிய நயங்கள்

https://www.tamilvu.org/courses-degree-p102-p1022-html-p10221l3-24837

சேதுப்பிள்ளை உரைநடையில் காணப்படும் இலக்கிய நயங்களை விளக்கமாகக் காண்பதற்கு முன்னர், 'இலக்கிய நயம்' என்னும் தொடர் உணர்த்தும் பொருளைத் தெரிந்து கொள்ள விரும்புகிறீர்கள் அல்லவா? எனவே அதன் விளக்கத்தைக் காண்போம்.

'உரைநடை' வடிவம் தமிழுக்கு அறிமுகமாகும் முன்னர் தமிழில் செய்யுள் மட்டுமே இலக்கிய வகைகள் அனைத்திற்கும் வடிவமாக இருந்தது. அப்போது 'நாவிற்கு ஒத்து வந்தால் பாவிற்கு ஒத்து வரும் ' என்று ஒரு முதுமொழி கூறுவர் ;இன்னும் சிலர், 'தொடை நயம் சிறந்தால் நடை நயம் சிறக்கும்' என்றும் உரைப்பர். 'நாவிற்கு ஒத்து வருதல்' என்பதற்கு இனிய இசையில் அமைந்திருப்பது என்று பொருள். இது படிப்பதற்குத் தங்குதடையின்றி,

அமைதலைக் குறிப்பதாகும். 'தொடை நயம்' என்பது, செய்யுளின் உறுப்புகளில் ஒன்றான 'தொடை' யைச் சுட்டுவதாகும்.

இந்தத் தொடை என்பது எதுகை, மோனை, இயைபு, முரண் என வருவனவற்றை உள்ளடக்கியதாகும். இவ்வாறு செய்யுளுக்கு உரைக்கப்பட்ட இவ்விரண்டு கூற்றுகளும் 'உரைநடை' வடிவத்திற்கும் பொருந்துவனவாகும். எனவே, உயர்ந்த உரைநடை என்பது நாவிற்கு ஒத்து வருவதாகவும், தொடை நயம் மிக்கதாகவும் இருத்தல் வேண்டும். இவ்விரு இலக்கிய நயங்களும் சேதுப்பிள்ளையின் உரைநடையில் பொதிந்திருக்கக் காணலாம்.

எதுகை நயம்

"தமிழறிஞர்களுள் மிகச் சிறந்த நாவீறு படைத்தவராக விளங்கியவர் 'சொல்லின் செல்வர்' என்று போற்றப்பட்ட பேராசிரியர் இரா.பி. சேதுப்பிள்ளை. அவரது சொன்மாரி செந்தமிழ்ச் சொற்கள் நடம்புரிய, எதுகையும் மோனையும் பண்ணிசைக்க, சுவைதரும் கவிதை மேற்கோளாக, எடுப்பான நடையில் நின்று நிதானித்துப் பொழியும்" என்று 'தமிழ்க் கடல் அலைஓசை பரவும் தமிழர் மாட்சி' என்னும் தம் நூலில் பேரா.க. அன்பழகனார் குறிப்பிடுகின்றார். இக்கூற்று இரா.பி. சேதுப்பிள்ளையின் உரைநடையில் உலவிவரும் இலக்கியக் கூறுகளை வரிசைப்படுத்துவதாகக் கொள்ளலாம்.

அவற்றில் முதலிடம் வகிப்பவை எதுகையும் மோனையும் ஆகும். எனவே இரா.பி. சேதுப்பிள்ளையின் உரைநடையில் காணப்படும் எதுகைச் சிறப்பை முதலில் காணலாம்.

'எதுகை' என்பதைச் செய்யுளில் அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருதல் என்பர். இதற்கு எடுத்துக்காட்டாக,

> **கற்றதனால் ஆயபயன் என்கொல் வாலறிவன்**
> **நற்றாள் தொழாஅர் எனின்**
> **(குறள் : 2)**

என்னும் குறளில் வரும்,

கற்ற நற்றா, என வருவதைக் கூறலாம்.

இனி, இவ்வாறு அமையும் எதுகை நயத்தைச் சேதுப்பிள்ளையின் உரைநடையில் காண்போம்.

'கடற்கரையிலே' - என்னும் நூலில் திருவள்ளுவர் தொடங்கிப் பாரதியார் வரை 20 தமிழ்ப் புலவர்தம் பெருமையைச் சேதுப்பிள்ளை புகழ்ந்து உரைத்துள்ளார். அவற்றுள் 'திருவள்ளுவர்' பற்றிக் குறிப்பிடும் போது, 'கடற்கரையில் எத்தனை எத்தனையோ காட்சிகள்; கண்ணுக்கடங்காத கடல் ஒரு காட்சி; எண்ணுக்கடங்காத மணல் ஒரு காட்சி;" என வரும் உரைநடைப் பகுதியில் அமைந்த,

கண்ணுக்கடங்காத - எண்ணுக்கடங்காத

எனவரும் எதுகையில் இலக்கிய இனிமை பொங்கி நிற்றலைக் காண்கிறோம்.

'உமறுப்புலவர்' என்ற தலைப்பில் அமைந்த கட்டுரையில்,

"அறம் மணக்கும் திருநகரே! சில காலத்திற்கு முன்னே பாண்டி நாட்டில் பருவமழை பெய்யாது ஒழிந்தது; பஞ்சம் வந்தது; பசிநோயும் மிகுந்தது; நாளுக்குநாள் உணவுப் பொருள்களின் விலை உயர்ந்தது; நெல்லுடையார் நெஞ்சில் கல்லுடையார் ஆயினர். அப்போது அன்னக் கொடி கட்டினார் சீதக்காதி. 'கார்தட்டினால் என்ன? கருப்பு முற்றினால் என்ன? என் களஞ்சிய நெல்லை அல்லா தந்த நெல்லை - எல்லார்க்கும் தருவேன்' என்று மார்தட்டினார் - இதுவன்றோ அறம்?" எனவரும் பத்தியில் அமைந்த,

நெல்லுடையார் - கல்லுடையார்
கார்தட்டினால் - மார்தட்டினார்

எனவரும் எதுகைகள் சேதுப்பிள்ளையின் செந்தமிழ் உரைநடையின் எதுகைச் சிறப்புக்கு எடுத்துக் காட்டுகள் ஆகும்.

மோனை நயம்

இரா.பி. சேதுப்பிள்ளையின் உரைநடையில் அமைந்திருக்கும் மோனை நயத்தை அறியும் முன்னர் 'மோனை' என்பதன் பொருளை அறிந்து கொள்வது பொருத்தம் ஆகும். எனவே மாணவர்களே 'மோனை' என்றால் என்ன என்பதை முதலில் அறிந்து கொள்வோம்.

ஓர் அடியில் சொற்கள் (சீர்கள்) தோறும் முதல் எழுத்து ஒன்றி வருவதை மோனை என்பர். மோனை அடிதோறும் முதல் எழுத்து ஒன்றி வருமாறும் அமைதல் உண்டு. இதற்கு,

கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக

எனவரும் குறளில் 'க' கரம் முதல் அடியின் நான்கு சீர்களிலும் முதல் எழுத்தாக வந்திருத்தலை எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

'**கற்க - நிற்க**' என்பது எதுகை என்பதை முன்னரே கண்டோம். அதனை இங்கும் நினைவில் நிறுத்துவது பொருத்தமாகும்.

இரா.பி. சேதுப்பிள்ளையின் உரைநடையில் மோனை நயம் நிறைந்து சிறக்கிறது.

'தமிழ் விருந்து' என்னும் நூலில் 'கலையும் கற்பனையும்' என்ற தலைப்பில் அமைந்த கட்டுரையில்,

"மலையிலே மழை பொழிந்து வெள்ளம் பொங்கி எழுகின்றது; அருவியாய் விழுகின்றது; ஆறாய்ப் பாய்கின்றது"

எனவரும் தொடர்களில் மோனை நயம் முகிழ்த்திருக்கக் காண்கிறோம்.

'ஊரும்பேரும்' என்னும் நூலில் 'நாடும் நகரமும்' என்ற தலைப்பில் அமைந்த கட்டுரையில் சேதுப்பிள்ளை சென்னை நகரைப் பற்றி எழுதுகிறார்.

சென்னையில், ஆதியில் அமைந்தது கோயில்; அதன்பின்னே எழுந்தது கோட்டை; அதைச் சார்ந்து பேட்டையும் பாக்கமும்

பெருகின. அனைத்தும் ஒருங்கு சேர்ந்து சென்னை மாநகரமாகச் சிறந்து விளங்குகின்றது;

இங்கு அகரத்தை மோனையாக அமைத்து உரைநடைக்குச் சேதுப்பிள்ளை அழகு சேர்த்துள்ளார்.

இயைபு நயம்

எதுகை மோனைக்கு அடுத்த நிலையில் உரைநடைக்கு அழகும் வனப்பும் வடிவமும் தரவல்லது 'இயைபு' ஆகும். செய்யுளில் இறுதி எழுத்தோ அல்லது சீரோ ஒன்றி வர அமைப்பது இயைபு எனப்படும். இது உரைநடைக்கு ஓசை நயம் ஊட்டுகிறது; படிப்பவர் நெஞ்சிலே கருத்தைப் பதிவு செய்வதற்குத் துணையும் செய்கிறது.

'திருவள்ளுவர்' என்னும் தலைப்பில் அமைந்த கட்டுரையில்,

'கடற்கரையில் எத்தனை எத்தனையோ காட்சிகள் கண்ணுக்கடங்காத கடல் ஒரு காட்சி; எண்ணுக்கடங்காத மணல் ஒரு காட்சி'

இங்குக் 'காட்சி' என்னும் இயைபு வந்து நிற்றல் காண்கிறோம்.

'உமறுப்புலவர்' என்னும் தலைப்பிலான கட்டுரையில்,

"பாண்டி நாட்டில் பருவமழை பெய்யாது ஒழிந்தது பஞ்சம் வந்தது; பசி நோயும் மிகுந்தது

இங்கு 'ஒழிந்தது; வந்தது; மிகுந்தது' என்பன இயைபு நயத்திற்கு எடுத்துக்காட்டுகளாக நிற்கின்றன. மேற்காணும் எடுத்துக்காட்டில் 'பகரம்' மோனையாக அமைந்திருப்பதையும் கருத்தில் பதித்துக் கொள்வது இன்பம் தரும் அல்லவா? எனவே அதனையும் இணைத்தே சேதுப்பிள்ளையின் உரைநடைச் சிறப்பை உணரத் தொடங்குவோம்.

முரண் நயம்

தொடை நயங்களுள் 'முரண்' என்பதும் ஒன்றாகும். முரண்பட்ட இரு சொற்களை அருகருகே அடுக்கிச் சொல்வதை முரண் என்பர்.

'இரவுபகலாக' உழைத்தான்; 'நாடும்காடும் அலைந்தான்', எனவரும் தொடர்களில் 'இரவுபகல்; நாடுகாடு' என்பன முரண்களாக அமைகின்றன. இத்தகைய முரண் நயமும் சேதுப்பிள்ளையின் உரைநடையில் காணப்படுகின்றது. இதற்கு எடுத்துக் காட்டுகள் பல இருந்தாலும் ஒன்றை மட்டும் இங்குக் காண்போம்.

ஊரும் பேரும் என்னும் நூலில் 'நாடும் நகரமும்' என்னும் தலைப்பிலான கட்டுரையில் பின்வரும் பத்தி காணப்படுகின்றது.

வாழ்வும் தாழ்வும் நாடு நகரங்களுக்கும் உண்டு சீரும் சிறப்பும் உற்று விளங்கிய சில நகரங்கள் இக்காலத்தில் புகைபடிந்த ஓவியம்போல் பொலிவிழந்திருக்கின்றன.

மேலே கண்ட பத்தியில் வாழ்வும் தாழ்வும் என்பது முரணுக்கான எடுத்துக்காட்டாகும். இத்துடன் சீரும் சிறப்பும் என்பதற்கு முரணாக, புகைபடிந்த என்பதும் முரணாக அமைந்துள்ளது.

உவமைகள்

உவமைகள் ஒரு கருத்தை எளிமையாக விளங்கிக் கொள்வதற்குப் பயன்படுவன: புதிய செய்தியொன்றை நெஞ்சில் நிறுத்துவதற்கும் அவை துணை செய்கின்றன. கவிதைக்கு மட்டுமன்றி உரைநடைக்கும் 'உவமை நயம்' இன்றியமையாத ஒன்றாகும். சேதுப்பிள்ளையின் எடுப்பான உரைநடையில் தொடுக்கப்பட்டிருக்கும் உவமைகள் எண்ணிக்கையில் மிகுதி. அவற்றின் அழகை எல்லாம் மாணவர்களே! நீங்கள் அந்தந்த நூல்களில் கண்டு மகிழலாம். இங்கு ஒன்றை மட்டும் எடுத்துக்காட்டுக்காகக் காண்போம்.

'தமிழ் விருந்து' என்னும் நூலில் 'கலையும் கற்பனையும்' என்னும் தலைப்பில் வரும் உரைநடையைப் பாருங்கள்.

'மலையிலே மழை பொழிந்து வெள்ளம் பொங்கி எழுகின்றது; அருவியாய் விழுகின்றது, ஆறாய்ப் பாய்கின்றது. ஆற்றுநீர் கால்களிலும் ஏரிகளிலும் நிறைந்து பயிர்பச்சைகளையும் செடி கொடிகளையும் வளர்க்கின்றது. இளம் குழந்தையைப் பாலூட்டி வளர்க்கும் தாய்போல் பசும்பயிர்களை நீரூட்டி வளர்ப்பது நதியாகும்". எனவரும் பகுதியில், "ஆற்றை அன்பு நிறைந்த

தாயாகவும் பயிர்களைப் பச்சிளம் குழந்தைகளாகவும்” உவமையாக்கி உரைத்திருப்பதைக் காணலாம்.

மேற்கோள்கள்

உரைநடை ஆசிரியர்களுக்கு மேற்கோள்கள் கைவரப் பெறுவது உரைநடையின் உயிர்ப்புத் தன்மையை உயர்த்திவிடும். சேதுப்பிள்ளை அவர்கள் தமிழ் இலக்கியத்தில் சங்க இலக்கியங்கள் முதல் பாரதியின் பாடல்கள் வரையில் நன்கு தோய்ந்தவர். திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் என்னும் இம்முப்பெரும் இலக்கியங்களிலும் மூழ்கி முத்தெடுத்தவர். எனவே அவரது உரைநடையில் இலக்கிய மேற்கோள்கள் எங்கும் காண்பதில் வியப்பில்லை. அத்தகைய மேற்கோள்களில் ஒன்றினைக் காண்போம்.

‘தமிழகம் அலையும் கலையும்’ என்னும் நூலில், சென்னை விலங்கக நூற்றாண்டு விழாவில் இரா.பி. சேதுப்பிள்ளை ஆற்றிய உரை இடம் பெற்றுள்ளது. அதில்,

‘பாம்பென்றால் படையும் நடுங்கும்’ என்பது பழமொழி. முற்காலத்தில் பாலைவனங்களில் பயங்கரமான ஒருவகைப் பாம்பு இருந்தது என்று கவிஞர்கள் கூறுகின்றனர். ‘திட்டிவிடம்’ என்பது அதன் பெயர். அந்தப் பாம்புக்குக் கண்ணிலே நஞ்சுண்டு; அதன் பார்வையிலே அகப்பட்ட உயிர்கள் எல்லாம் நஞ்சுண்டு இறந்துபடும்; மாசிலாக் கற்புடைய மங்கையரை அப்பாம்பிற்கு ஒப்பாகக் கூறுவதுண்டு. சீதைக்குத் தவறிழைத்த இராவணனை நோக்கி,


திட்டியின் விடமன்ன கற்பின் செல்வியை விட்டிலையோ, இது விதியின் வண்ணமே

என்று கும்பகர்ணன் கேட்பதாக அமைகின்ற கம்பராமாயணப் பாடல் அடிகளை இரா.பி. சேதுப்பிள்ளை மேற்கோளாகக் காட்டியிருப்பது மிகுந்த பொருத்தத்துடன் அமைந்திருக்கக் காண்கிறோம். இங்கு சேதுப்பிள்ளையின் உரைநடை மேற்கோள்களை ஆளுவதிலும் சிறப்புற்று விளங்குவதை அறிகிறோம்.

https://www.tamilvu.org/ta/courses-degree-p102-p1022-html-p1022l0-24834

கடற்கரையிலே

ரா. பி. சேதுப்பிள்ளை, பி.ஏ. பி.எல்.



ரா. பி. சேதுப்பிள்ளை (1896 - 1961) ஒரு தமிழ் அறிஞர், எழுத்தாளர், வழக்குரைஞர், மேடைப்பேச்சாளர். இவர் தமிழில் சொற்பொழிவு ஆற்றுவதிலும், உரைநடை எழுதுவதிலும் மிகவும் பெயர் பெற்றவர். இனிய உரைச் செய்யுள் எனக் குறிப்பிடும் அளவுக்கு அவரது உரைநடை இனிமை வாய்ந்தது எனப் பலரும் பாராட்டியுள்ளனர். உரைநடையில் அடுக்குமொழியையும், செய்யுள்களுக்கே உரிய எதுகை, மோனை என்பவற்றையும் உரைநடைக்குள் கொண்டு வந்தவர் இவரே எனப்படுகின்றது. இரா.பி. சேதுப்பிள்ளையின் உரைநடை நூல்கள் இருபதுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் அடங்குவன. பதினான்கு கட்டுரை நூல்கள் மூன்று வாழ்க்கை வரலாற்று நூல்கள் எழுதியுள்ளார். நான்கு நூல்களை பதிப்பித்தார். சேதுப்பிள்ளையின் நூல்களுள் பலவும் அவர் தமிழக வானொலி நிலையங்களில் ஆற்றிய இலக்கியப் பொழிவுகளின் தொகுப்புக்களாகும். இன்னும் சில நூல்கள் அவர் தமிழகத்தின் பல்வேறு இலக்கிய அமைப்புகளில் ஆற்றிய இலக்கியச் சொற்பொழிவுகளின் தொகுப்புக்களாக அமைந்தவை. எனவே அவரது உரைநடை மேடைப் பேச்சின் இயல்பினில் அமைந்ததாக உள்ளது. ஆதலின் அவரது எழுத்தும்பேச்சும் வேறுபாடின்றி அமைந்துள்ளன. இலக்கிய அமைப்புகளில் அவர் ஆற்றிய எழுச்சி மிகுந்த பொழிவுகளே இனிய உரைநடையாக வடிவம் பெற்றன.

https://freetamilebooks.com/ebooks/kadarkaraiyile/

ரா. பி. சேதுப்பிள்ளையின்

பாரதி கட்டுரைகள்!

https://tamilandvedas.com/2017/09/10/%E0%AE%B0%E0%AE%BE-%E0%AE%AA%E0%AE%BF-%E0%AE%9A%E0%AF%87%E0%AE%A4%E0%AF%81%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%BF%E0%AE%B3%E0%AF%8D%E0%AE%B3%E0%AF%88%E0%AE%AF%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%8D-%E0%AE%AA/

Written by S.NAGARAJAN



சிறந்த தமிழ் அறிஞரான ரா.பி.சேதுப்பிள்ளை (1896-1961) திருநெல்வேலியில் உள்ள ராஜவல்லிபுரத்தில் பிறந்தவர்.

சாஹித்ய அகாடமியின் விருதை முதன் முதலில் -1955ஆம் ஆண்டில் – பெற்ற தமிழர். ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமை மிக்க அவர் ஒரு வக்கீலாக வாழ்க்கையைத் தொடங்கினார். பின்னர் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணி புரிந்தார். பின்னர் மதராஸ் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறையில் பணியாற்றினார். அவரது உரை நடையில் தமிழ் விளையாடும். பல நூல்களைப் படைத்தவர் அவர்.

கடற்கரையிலே என்ற அவரது நூலில் தமிழ் அறிஞர்கள் கடற்கரையில் ஆற்றும் உரைகள் அற்புதமானவை. கடற்கரையிலே என்ற அவரது நூலில் பாரதியாரின் உரையும் ஒன்று..

அதிலிருந்து சில பகுதிகள்:

"நல்லோர் போற்றும் அல்லிக்கேணியே! உன் மலர்க்கேணியின் அழகைக் கண்டுதான் மாமுகில் வண்ணன் அதனருகே கோயில் கொண்டானோ? அன்று பஞ்சவருக்குத் துணை புரிந்த அஞ்சன வண்ணன் – பார்த்தனுக்குப் பாகனாகிய பரந்தாமன்- அறப்பெருந் துணைவன் – அடியார்க்கு எளியன் – நின்னகத்தே நின்று அருள் புரிகின்றான். அந்தக்

"கண்ணைக் கண்டேன் – எங்கள்
கண்ணனைக் கண்டேன் மணி
வண்ணனை ஞான மயிலினைக் கண்டேன்."

"தொல்புகழ் வாய்ந்த அல்லிக்கேணியே! இந்நாளில் உன் அருமையை அறிவார் யார்? உன் கடற்கரையில் அன்று தமிழ்த் தென்றல் தவழ்ந்தது; இன்று மேல் காற்று வீசுகின்றது. அன்று உன் அரங்கத்தில் எங்கள் தமிழன்னை ஆனந்த நடனம் புரிந்தாள்; இன்று, ஆங்கில மாது களியாட்டம் ஆடுகின்றாள். அவளுடைய வெள்ளை நாவிலே தெள்ளிய தமிழ் வளம் ஏறுமா? அவள் இறுமாந்த செவியிலே தேமதுரத் தமிழோசை சேருமா? அந்தோ! திருவல்லிக்கேணியே! வேற்றரசின் கொடுமையால், நீ சீர் இழந்தாய்; பேர் இழந்தாய்; 'திரிப்பளிக்கே' னாகத் திரிந்துவிட்டாய்!

"அல்லிக் கருங்கடலே! உன் அழகமைந்த கரையிலே, வெள்ளையர் விளையாடித் திரிகின்றார்; வெறியாட்டயர்கின்றார்; உலாவுகின்றார்; குலாவுகின்றார். அவரைக் கண்டு அஞ்சி, நம்மவர்

நெஞ்சம் குலைகின்றாரே! சிப்பாயைக் கண்டால் அச்சம்; துப்பாக்கியைக் கண்டால் நடுக்கம்; சட்டைக் காரனைக் கண்டால் குட்டிக் காரணம். இப்படி வாழ்வதும் ஒரு வாழ்வாகுமா? பிறந்த நாட்டில் பிறர்க் கடிமை செய்தல் பேதைமை யன்றோ?

"அறப்பெருங் கடலே! வீர சுதந்தர வேட்கை இந் நாட்டிலே வேரூன்றி விட்டது. இனி அதை அசைக்க எவராலும் ஆகாது. வந்தேமாதரம் என்ற மந்திர மொழியால் பாரத நாட்டைத் தட்டி எழுப்பிய பாலகங்காதர திலகரை அரசாங்கத்தார் சிறையில் மாட்டலாம். தென்னாட்டுத் திலகர் என்று பேர் பெற்ற எங்கள் சிதம்பரனாரைச் சிறைக் கோட்டத் தில் அடைக்கலாம்; செக்கிழுக்க வைக்கலாம்; துச்சமாக எண்ணித் தூறு செய்யலாம். ஆயினும், அவர் மூட்டிய கனல் வெள்ளையர் ஆட்சியை வீட்டியே தீரும்!

"சொந்த நாட்டில் பிறர்க்கடி மைசெய்தே
துஞ்சிடோம – இனி அஞ்சிடோம்"

என்ற வீர சுதந்தர வேகத்தை நிறுத்த யாரால் முடியும்? எரிமலையைத் தடுக்க – அதன் வாயை அடைக்க – எவரால் இயலும்?

தமிழ் இன்பம் என்ற அவரது நூலில் எட்டாம் பகுதி பாரதியார் பாட்டின்பம் என்ற தலைப்பைக் கொண்டதாகும். இப்பகுதியில் செந்தமிழ் நாடு, முப்பெரும் கவிஞர், கலையின் விளக்கம், பண்டாரப் பாட்டு, தமிழ்த்தாய் வாழ்த்து ஆகிய ஐந்து கட்டுரைகள் உள்ளன. அனைத்துமே அருமையானவை.

சில பகுதிகளை இங்கு காணலாம்:

"செந்தமிழ் நாடு" என்ற கட்டுரையிலிருந்து :-

"செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே – எங்கள்

தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே"

என்று கவிஞர் அழகாக எடுத்துரைத்தார். செந்தமிழ் நாடு என்று சொல்லும்பொழுது தென் தமிழின் தீந்தேன் செவிகளில் விரைந்து பாய்ந்து நிரம்புகின்றது. தாயின் செவிகளில் விரைந்து பாய்ந்து நிரம்புகின்றது. தாயின் இனிமையும் அன்பும் செந்தமிழ் நாடு என்னும் பெயரில் அமைந்திருத்தலால், நம் செவியின் வாயிலாக இன்பத்தேன் வந்து பாய்வதாகும். இத் தமிழ் நாட்டில் வாழ்ந்த அறிஞர், இனிமையும் தமிழும் வேறென்று அறிந்தாரல்லர்; தமிழ் என்னும் பதத்திற்கே இனிமை என்ற பொருள் கண்டார்கள். இத் தகைய இனிமை வாய்ந்த தமிழ் ஒலி, இன்னொலியாய், இன்ப ஒலியாய், ஆனந்தத் தேன் சொரியும் அழகிய ஒலியாய் இனிமை பயப்பது இயல்பே யன்றோ? இன்னும், இந் நாட்டைத் தந்தை நாடென்று கருதும் பொழுது, அத் தந்தையின் மக்களாய்ப் பிறந்த நமது உரிமை, மனத்தில் முனைந்து தோன்றவதாகும். இவ்வுரிமைக் கருத்து உள்ளத்தைக் கவரும்பொழுது வீரம் கிளம்புகின்றது. தாயை அன்பின் உருவமாகவும், தந்தையை வீரத்தின் வடிவமாகவும் கருதிப் போற்றுதல் தமிழ் வழக்காகும். அந்த முறையில் தமிழ்நாட்டைத் தாய் நாடு என்று நினைக்கும் பொழுது அன்பினால் இன்பம் பிறக்கும்; தந்தை நாடு என்று கருதும்போது, ஆண்மையால் வீரம் பிறக்கும். இவ் வுண்மையை உணர்த்தக் கருதிய பாரதியார், முதலில் தாயன்பை அமைத்து, பின்பு தந்தையின் வீரத்தைப் பேசும் முறை, அறிந்து போற்றுதற்குரியதாகும்.

தமிழ்த் தாய் வாழ்த்து என்ற கட்டுரையின் இறுதிப் பகுதி இது:-

ஆங்கிலம் முதலிய மேலை நாட்டு மொழிகளையறிந்த மாணவர் கடமையைப் பாரதியார் பண்புறக் கூறுகின்றார்; பிற நாட்டு நல்லறிஞர் இயற்றிய புத்தம் புதிய கலைநூல்களைத் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும். அக் கலைகளிலமைந்த புதிய கருத்துகளை உணர்த்தும் பெற்றி வாய்ந்த பழந்தமிழ்ச் சொற்கள் பண்டைப் பனுவலிற்பதிந்து கிடக்குமாயின் அவற்றை அகழ்ந்தெடுத்து வழக்காற்றில் உய்த்தல் வேண்டும். புதிய சொற்கள்

வேண்டுமாயின், தமிழ்ச் சொல்லாக்க முறையறிந்து அவற்றைப் பிறப்பித்தல் வேண்டும். நல்ல நூல்களை மொழி பெயர்த்தும் நவீன நூல்களை மொழி பெயர்த்தும் நவீன நூல்களை இயற்றியும் மொழியின் கலைச்செல்வத்தைப் பெருக்க வேண்டும். இங்ஙனம் விரைந்து பணிசெய்ய முற்படாது, தமிழ்மொழியின் பழம்பெருமை பேசி மகிழ்வதாற் பயனில்லை. "மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை." 'கண்ணுதற் பெருங் கடவுளும் கழகமோடமர்ந்து பண்ணுறத் தெரிந்தாய்ந்த பைந்தமிழ்' என்று பாராட்டுவதனால் தமிழ் மொழி பரவிவிட மாட்டாது. என்றுமுள தென்றமிழ்' என்று இறுமாந்து பேசுவதால் தமிழ்மொழி ஏற்றமுற மாட்டாது. 'சங்கத் திருப்பிலே யிருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை' என்று வாய்ப்பறை சாற்றுவதால் தமிழ்மொழி வளர்ந்துவிட மாட்டாது. தமிழ்மொழித் தொண்டு செய்யக் கருதும் தகை சான்ற அறிஞர் பழம் பெருமை பேசும் பழக்கத்தை விட்டொழித்து, தமிழ் மொழியின் குறைகளை அறிந்து, பணி செய்ய முற்பட வேண்டும். தமிழ் நாட்டிலமைந்த பல்கலைக் கழகங்கள் மேலை நாட்டுக் கலைகளை மொழி பெயர்க்கும் விழுமிய பணியை மேற்கொள்ள வேண்டும். தமிழன்னை மீண்டும் தலைசிறந்து விளங்கும் காலம் வருமோ என்று ஏங்கித் தளர்பவர் இந் நாளில் பலராவர். இங்ஙனம் தமிழ்ச் சேய்களிற் பலர் மயங்கித் தளர்ந்தாலும் தமிழ்த் தாய் மனம் தளரவில்லை; உரனிழந்த மக்கள் மனத்தைத் தேற்றுகின்றாள்; எத்திசையும் புகழ் மணக்க மீண்டும் தான் ஏற்றமுறும் காலம் அண்மையில் வருமென்று அறிவிக்கின்றாள். ஆதிசிவன் அருளாலும் அறிவறிந்த மக்கள் ஆர்வத்தாலும் வீறுபெற்று விளங்குவேன்' என்று தமிழன்னை வாயிலாகப் பாரதியார் கூறும் வாய்மொழி கார்மேகத்தினிடையே இலங்கும் கதிரொளியாகும்.

"வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழர்
வாழிய பாரத மணித்திரு நாடு" .

ரா.பி.சேதுப்பிள்ளை அவர்களின் நூல்கள் நாட்டுடமை ஆக்கப்பட்டிருப்பதால் அவற்றை எளிதில் பெற்று படித்து இன்புற இயலும்.

அவரது நூல்களில் கடற்கரையிலே, தமிழர் வீரம் மற்றும் தமிழ் இன்பம் ஆகிய நூல்களை www.projectmadurai.org என்ற இணையதளத்தில் படித்து மகிழலாம், இலவசமாக தரவிறக்கமும் செய்து கொள்ளலாம்.

ப்ராஜக்ட் மதுரைக்கு தமிழர்களின் நன்றி என்றும் உரித்தாகுக.

ரா.பி.சேதுப்பிள்ளை அவர்களின் பாரதியார் பற்றிய கட்டுரைகள் பாரதி அன்பர்களின் உள்ளங்களை மகிழ்விக்கும் தமிழ்ச் செல்வம் ஆகும்!

படிப்போம், மகிழ்வோம்,
பாரதி இயல் தொகுப்பில் அவற்றைச் சேர்ப்போம்!

தமிழ் இசை விழா

தலைமையுரை

தமிழின்பம் ஆசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை

தமிழ் இசைச் சங்கத்தின் பத்தாம் ஆண்டு விழா சென்னை அண்ணாமலை மன்றத்தில் 15-1-53-இல் நடைபெற்றது.

https://ta.wikisource.org/wiki/%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%B4%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%AE%E0%AF%8D/%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%B4%E0%AF%8D_%E0%AE%87%E0%AE%9A%E0%AF%88_%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%B4%E0%AE%BE

@@@@@@@@@@@@@@@

பெரியோர்களே ! அன்பர்களே!!

இந்நாள் தமிழ் மக்களுக்கு ஒரு நன்னாள் ஆகும். சென்னை மாநகரில் பத்தாண்டுகளாகச் சிறந்த பணி யாற்றி வரும் தமிழிசைச் சங்கம், இன்று 'அண்ணாமலை மன்றம்' என்னும் அழகிய காலைக்கோவிலில் அமர்ந்து காட்சியளிக்கின்றது. மன்றம் என்ற தமிழ்ச்சொல்லைக் கேட்டது செவிக் கின்பம்; அதன் பொருளை அறிவது சிந்தைக்கு இன்பம். பழந்தமிழ் மொழியில் மன்றம் என்பது ஊர் நடுவேயுள்ள பொதுவிடமாகும். இன்று தமிழகத்தின் தலைநகராகிய சென்னையம்பதியின் நடுவே, தமிழரின் சீர்மைக்கு ஒரு சான்றாக நிற்கும் இம் மாளிகை, தமிழ் மக்கள் அனைவருக்கும் பொதுவுடைமையாதலால் இதனை மன்றம் என்று அழைப்பது சாலவும் நன்றே. தமிழ் நாட்டில் எல்லையற்ற பெருமை வாய்ந்த தில்லையம்பதியின் அருகே பல்கலைக் கழகமொன்று நிறுவி, பாரத நாட்டுக்கலை வரலாற்றில் நிலையான ஒர் இடம் பெற்றுப் புகழுடம்பில் வாழும் ராஜாசர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் தமிழார்வமும் தலையாய வள்ளன்மையும் இக்கலை மாளிகையாக உருவெடுத்துக் காட்சிதருகின்றன. அண்ணாமலையரசருடன் இசைவளர்க்கும் பெரும் பணியில் ஈடுபட்டுக் கண்ணினைக் காக்கும் இமைபோல் தமிழிசைச் சங்கத்தைக் காத்து வரும் பேரறிஞர் டாக்டர் ஆர்.கே சண்முகஞ் செட்டியார் அவர்களுடைய கலை வண்ணமும் இம்மாளிகையிலே காட்சி தருகின்றது. இப்பெருந்தலைவர் இருவரும் முன்னின்று நடத்திய திருப்பணி சிறக்கும் வண்ணம் பொருளுடையார் ஆதரவு புரிந்தனர்; அருளுடையார் ஆசி கூறினர். இவ்வாறு ஒல்லும் வகையால் உதவி செய்து தமிழிசைக் கோயிலை உருவாக்கிய நல்லார் அனைவருக்கும் தமிழ் மக்களின் நன்றி என்றும் உரியதாகும்.

தமிழ்நாடு இப்பொழுது புத்துயிர் பெற்று வருகின்றது. இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் பொது மக்களின் ஆதரவைப் பெற்று முன்னேறுகின்றன. இவ்வாண்டில், சென்னை மாநகரிலே தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ஆதரவில் இயற்றமிழ் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. நாடகத் தமிழாசிரியர் முதுபெரும்புலவர் திரு. சம்பந்த முதலியார் அவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்நகரில் நிகழ்ந்த நாடகத்தமிழ் விழா என்றுமில்லாதே தார் இன்பக் காட்சியா யிருந்தது. இசைத் தமிழ் விழா இன்று இம்மன்றத்தில் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. இம்மூன்று தமிழ் விழாக்களையும் தொடங்கி வைத்து ஆசி கூறிய அண்ணல், கைராசியுள்ள ராஜாஜி என்றால், முத்தமிழின் முன்னேற்றத்திற்கு இனித் தடையும் உண்டோ?

இசைத் தமிழ் என்பது முத்தமிழின் நடுநாயகமாக விளங்குவது. இசைத் தமிழ் என்றாலும் தமிழிசை என்றாலும் பொருள் ஒன்றே.

இயல், இசை, நாடகம் என்னும் மூவகைத் தமிழையும் முன்னாளில் முனிவரும் மன்னரும் முன்னின்று வளர்த்தார்கள். முத்தமிழையும் துறையோகக் கற்ற வித்தகராகிய முனிவர் ஒருவர், பொதிய மலையில் அமர்ந்து தமிழ்ப் பணி புரிந்தார். அவரைத் திரு முனிவர் என்றும், குறு முனிவர் என்றும், முத்தமிழ் முனிவர் என்றும் கவிஞர்கள் புகழ்ந்துரைத்தார்கள்.

"முத்தமிழ் மாமுனி நீள்வரை யேநின்று
மொய்ம்புறக் காக்கும் தமிழ்நாடு"

என்று பாடினார் பாரதியார்.

இத்தகைய பெருமை வாய்ந்த முனிவர், தமிழ் நாட்டிற்கு மலைபோல் வந்த இடரை மஞ்சுபோல் இசைத் தமிழால் அகற்றிப் பாதுகாத்தார் என்று சங்க இலக்கியம் கூறுகின்றது. 'ஆசைக்கோர் அளவில்லை' என்னும் ஆன்றோர் மொழியை மெய்ப்பித்த இலங்கை வேந்தனாகிய இராவணன் தமிழ் நாட்டிலும் ஆதிக்கம் செலுத்தத் தலைப்பட்டான். தமிழ் மலையாகிய பொதிய மலையைக் கைப்பற்றிக் கொண்டால் தமிழ் நாட்டை வளைத்து ஆட்சி புரிதல் எளிது என்று எண்ணினான் அம் மன்னன். அந்நோக்கத்தோடு பொதிய மலைக்குப் போந்தான்; அங்கே முத்தமிழ் முனிவராகிய அகத்தியர் அமர்ந்திருக்கக் கண்டான்; இராவணன் வல்லரசனாயினும் இன்னிசையில் ஈடுபட்டான். நாரத முனிவனும் நயக்கும் வண்ணம் நல்லிசை பாட வல்லவன்; பன்னருஞ் சாமகீதம் பாடி ஈசனது இன்னருளைப் பெற்றவன்; இசைக்கலையில் இத்துணை ஏற்றம் வாய்ந்த இராவணன் தமிழிசையிற் புகழ் பெற்ற முனிவரிடம் தன் கைவரிசையைக் காட்ட ஆசைப்பட்டான். அவன் கருத்தறிந்த தமிழ் முனிவர் தம் இசைக் கருவியாகிய யாழை மீட்டினார்.

மன்னனுக்கும் முனிவருக்கும் இசைப்போட்டி நிகழ்ந்தது. முதலில் அரக்கர்கோன் அருமையாகப் பாடினான். அதன்பின் அகத்தியர் தமிழிசையை யாழில் அமைத்துப் பாடினார். அவர் பாட்டொலி கேட்ட பறவைகளும் விலங்குகளும் பரவசமுற்றன. எதிரே நின்ற கரும்பாறை இளகிற்று. அரக்கர் கோன் உள்ளம் உருகிற்று. அந்நிலையில் அகத்தியரை நோக்கி, 'என் உயிரினும் இனிய இசை ஞானியே! உமக்கு என்ன வேண்டும்?' என்றான் இராவணன். தமிழ் நாட்டைப் பாதுகாப்பதற்கு ஏற்ற சமயம் வந்துற்றது என்று அறிந்த முனிவர், 'ஐயனே! இந்நாட்டிலுள்ளார் எவரையும் நீ துன்புறுத்தாமல் இருக்க வேண்டும்' என்றார். அதற்கிசைந்த இராவணனும் பொதியமலையை விட்டகன்றான்.

அன்று முதல் தமிழகத்தில் ஆட்சி செலுத்தும் கருத்தை அடியோடு விட்டொழித்தான் அரக்கர் கோமான். 'தமிழிசையின் வெற்றியால் அரக்கர் அச்சம் அகன்றது' என்று தமிழ் மக்கள் அகங்களித்தார்கள். இச்செய்தியைத்[2] தொல்காப்பியப் பாயிர வுரையாலும் மதுரைக் காஞ்சியுரையாலும் அறியலாம். இவ்வரலாற்றால் தமிழ் நாட்டை முன்னாளில் அபயமளித்துக் காத்தது இசைத் தமிழே என்பது இனிது விளங்கும்.

இவ்வாறு தமிழ்நாட்டைப்பாதுகாத்த இசைத் தமிழ், கடல் கடந்து இலங்கைக்குச் சென்று வெற்றி பெற்ற

செய்தியும் அறியத் தக்கதாகும். இன்று இலங்கையில் தமிழர் வாழும் நாடும் நகரமும் யாழ்ப்பாணம் என்னும் அழகிய பெயரைப் பெற்றுள்ளன. யாழ்ப்பாணர் என்பவர் இன்னிசைக் கருவியாகிய யாழைக் கையி வேந்தித் தமிழ்ப் பாட்டிசைக்கும் இசைவாணர். யாழ்ப் பாணர் என்ற குலத்தார் இப்பொழுது தமிழ்நாட்டில் இல்லையென்றாலும், முன்னாளில் அவர் சிறந்து வாழ்ந்தனர் என்பதற்கு ஒரு சான்றாக நிற்பது யாழ்ப் பாணம் என்னும் நன்னகரம்.

பழந்தமிழ்க் குடிகளாகிய பாணரைத் தமிழ் நாட்டுப் பெருநில மன்னரும் குறுநில மன்னரும் ஆதரித்தார்கள்; வரிசை அறிந்து அவர்க்குப் பரிசளித்தார்கள். சோழ நாட்டு மன்னனாகிய கரிகால் வளவனும் தொண்டை நாட்டில் ஆட்சி புரிந்த இளந்திரையனும் குறுநில மன்னனாகிய நல்வியக்கோடனும் இசைவாணர் குலத்தை ஆதரித்த செய்தி பத்துப்பாட்டிலே கூறப்படுகின்றது. சோழ நாட்டின் தலைநகராகிய காவிரிப்பூம்பட்டினத்தில் பெரும் பாணர் குலம் சிறப்புற்று வாழ்ந்ததென்பது சிலப்பதிகாரத்தால் நன்கு அறியப்படுகின்றது. எனவே, முற்காலத்தில் தமிழிசையை இசைத் தொழிலுக்காகப் பயின்றவர் பாணர் குலத்தவரே என்பதும், அவர்களை ஆதரித்த பெருமை தமிழ்நாட்டு மன்னர்க்கு உண்டு என்பதும் பண்டைத் தமிழ் நூல்களால் விளங்குவனவாகும்.

சங்க காலம் என்று சொல்லப்படுகின்ற பழங்கால நூல்களில் வரும் இசைப் பாடல்கள் இயற்கை நலங்களையும் இறைவன் பெருமையையும் அழகுற எடுத்துரைக்கின்றன. பரிபாடல் என்னும் பழைய இலக்கிய நூலில் வைகை ஆற்றைப் புகழ்ந்து பா'

பாடல்கள் பல உண்டு. தமிழ்நாட்டின் நல்லணியாகத் திகழும் காவேரி ஆற்றை இளங்கோவடிகள் இசைப் பாட்டால் புகழ்ந்து வாழ்த்தியுள்ளார்.

"பூவார் சோலை மயிலாகப் புரிந்து குயில்கள் இசைபாடக்
காமர் மாலை அருகசைய நடந்தாய் வாழி காவேரி "

என்ற இசைப் பாட்டைக் கேட்கும் பொழுது தமிழ்ச் செவிகளில் இன்பத் தேன் வந்து பாய்கின்றதன்றோ?

இவ்வாறு பாணர்களும் புலவர்களும் வளர்த்து வந்த தமிழிசையைச் சைவ சமய நாயன்மார்களும் வைணவ சமய ஆழ்வார்களும் பக்தி நெறியைப் பரப்புவதற்குப் பயன்படுத்தினார்கள். ஈசனைப் பாடிய தேவாரத் திருப்பாசுரங்கள், இறைவன் திருவருளை இன்னிசையால் எளிதிற் பெறலாம் என்னும் உண்மையை எடுத்துரைக்கின்றன. இன்னிசை பாடுவார் பெறும் பயனைத் திருஞானசம்பந்தர் குறித்துள்ளார்.

"பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக
மண்ணின்றி விண்கொடுக்கும் மணிகண்டன்"

என்பது அவர் திருவாக்கு. 'இசைத் தமிழால் வழிபடும் அடியார்க்கு ஈசன் மண்ணுலக வாழ்வும் தருவான்; விண்ணுலக வாழ்வும் தருவான்' என்பது இப்பாட்டின் கருத்து. திருநாவுக்கரசர் என்னும் பெரியார் கடுமை யான சூலை நோயுற்றுத் துடிக்கும்பொழுது இறைவனை நினைந்து, "ஐயனே!"

"தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்"

என்று மனம் உருகிப் பாடினார். எனவே, இறைவன் அருளைப் பெறுவதற்குத் தமிழிசையே சிறந்த சாதனம் என்னும் கொள்கை தமிழ் நாட்டில் பரவிற்று. சிவனடியார்களும் திருமாலடியார்களும் அருளிய அருட்பாடல்கள் நாடெங்கும் பரவிய பான்மையால் பக்தி வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய் நின்றது. இறைவனுக்குத் திருக்கோவில் கட்டும் பணியிலே ஈடுபட்டனர் தமிழ் மன்னர். தேவாரப் பாடல் பெற்ற ஸ்தலங்களும் ஆழ்வார்களின் மங்களா சாசனம் பெற்ற திருப்பதிகளும் பொதுமக்களின் மனத்தைப் பெரிதும் கவர்ந்தன. 'கோவில் இல்லா ஊரில் குடி இருத்தல் ஆகாது' என்னும் கொள்கையும் எழுந்தது. இங்ஙனம் ஊர்தோறும் எழுந்த கோவில்களில் தெய்வத் தமிழ்ப் பாடல்களை நாள்தோறும் பாடுதற்குரிய முறை வகுக்கப்பட்டது. சிவாலயங்களில் தேவாரம் முதலிய திருமுறைகளை விண்ணப்பம் செய்யும் இசைவாணர் ஓதுவார் என்று பெயர் பெற்றனர்.

"காத லாகிக் கசிந்துகண் ணிர்மல்கி
ஓது வார்தமை நல்நெறிக்கு உய்ப்பது

வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சி வாயவே"

என்று திருஞான சம்பந்தர் பாடிய தேவாரத்தில் 'ஓதுவார்' என்னும் சொல் ஈசன் புகழைப் பாடுவார் என்று பொருள் படுகின்றது. வழிபாட்டுக் காலங்களில் ஓதுவார் என்னும் தமிழிசைவாணர்கள் பக்திச் சுவை நிரம்பிய பாடல்களைப் பண்ணோடு பாடிய பொழுது அவற்றை அன்பர்கள் செவியாரப் பருகினர்; உள்ளம் உருகினர். எனவே, ஆதியில் அரசரால் ஆதரிக்கப் பெற்ற இசைத் தமிழ், இடைக் காலத்தில் ஆலயங்களின் ஆதரவு பெற்று வளர்ந்தது.

இயற்கையோடு இசைந்து இன்புறும் தன்மை யினராகிய தமிழ் மக்களது வாழ்க்கையின் பல துறைகளிலும் கலந்து இசைப் பாட்டு வளமுற்றது. வேளாண்மை என்னும் பயிர்த் தொழில் இந்நாட்டிலே தொன்று தொட்டு நிகழும் பழுதற்ற தொழிலாகும். அத்தொழிலை மேற்கொண்ட பணியாளர் நெற்றி வேர்வை நிலத்தில் விழப் பாடுபடும்போதும் நல்ல பாட்டிசைத்தார்கள். கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்து நிலத்திலே பாய்ச்சும் பொழுது ஏற்றப் பாட்டு; நாற்று நடும்பொழுது நடுகைப் பாட்டு: அறுப்புக் களத்தில் ஏர்க்களப் பாட்டு; ஆக, பயிர்த் தொழிலாளரது பாட்டு பலவாகும்; இன்னும் குறிஞ்சி நிலத்திலே குறுத்திப் பாட்டு ஒலிக்கும். மருதநிலத்திலே பள்ளுப் பாட்டு முழங்கும். பெண்கள் பந்து விளையாடும் பொழுது பாட்டு; அம்மானை ஆடும் பொழுது பாட்டு; தாலாட்டும் பொழுது பாட்டு. சுருங்கச் சொல்லின் தமிழ்நாட்டில் பாட்டில்லாத பணியே இல்லை என்பது மிகையாகாது.

போர்க்களததைப் பற்றிய இசைப் பாட்டும் இந் நாட்டில் உண்டு. அவற்றுள் தலைசிறந்தது "கலிங்கத்துப் பரணி என்னும் தாழிசைப் பாட்டாகும். தமிழ்நாட்டுப் பெருவேந்தனாகிய குலோத்துங்க சோழன் கவிங்க நாட்டின்மேல் படையெடுத்து வாகைமாலை சூடிய வரலாற்றைப் புனைந்துரைப்பது கலிங்கத்துப்பரணி. பரணி பாடிய செயங்கொண் டான் என்னும் கவிஞனைக் குலோத்துங்க சோழன் பரிசளித்துப் பாராட்டினான். அம்மன்னன் தமிழிசையில் மிகவும் ஈடுபட்டவன்; போர் ஒழிந்த காலங்களில் தமிழ் இசைவாணரொடும் கலைவாணரொடும் பழகி இன்புற்றவன். அவனுடைய தேவியர்களில் ஒருவர் ஏழிசை வல்லபி என்னும் சிறப்புப் பெயர் பெற்று விளங்கினார். இன்னிசையின் சுவையறிந்த மன்னவன் இசைக் கலையின் நயந்தெரிந்த ஒரு நங்கையை மணந்து, ஏழிசை வல்லபி என்னும் சிறப்புப் பெயரையும் அவளுக்கு அளித்தான் என்று தோன்றுகிறது இவ்வாறு பல துறைகளிலும் புகுந்து தமிழ் மக்களின் வாழ்க்கையை இன்புறுத்திய இசைத் தமிழ்,

இக்காலத்திலே நாட்டுப் பற்றை வளர்ப்பதற்கும், அரசியல் அறிவைப் பரப்புவதற்கும் பயன்படுகின்றது. இந்த வகையில் வழி காட்டியவர் 'பாட்டுக்கொரு புலவன்' என்று பாராட்டப்படுகின்ற பாரதியாரே ஆவார். இந்நாட்டில் வழங்கிய பழைய இசைப்பாட்டு வகை பாரதியார் கவிதையிலே மிளிர்கின்றது. இந்நாடு சுதந்திரம் அடைந்த பொழுது மக்கள் எல்லோ ரும் பாடிய பாட்டு, "ஆடுவோமே பள்ளுப் பாடு வோமே, ஆனந்த சுதந்தரம்அடைந்து விட்டோமென்று ஆடுவோமே" என்பது. இந்தப் பாட்டு பழங்காலப் பள்ளுப் பாட்டைத் தழுவி எழுந்தது என்பது சொல்லா மலே விளங்கும். இன்னும், பண்டாரப் பாட்டு" என்று பாரதியார் பாடியுள்ள "அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே" என்ற வீரப்பாட்டு, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே திருநாவுக்கரசர் பாடிய 'அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவது மில்லை" என்று வீரப்பாட்டை அடியொற்றிச் செல்வதாகும். இங்ஙனம் பழைய இசை மரபுகளைப் பின்பற்றிப் பாடிய பாரதியார், இனி வருங்காலத்தில் இசைத் தமிழ் வளர்ந்தோங்குதற்குரிய வழிகளையும் காட்டியுள்ளார். தமிழ் நாட்டில் தமிழ் மொழி தழைத்து ஓங்க வேண்டுமாயின் மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதில் ஒர் மகிமை இல்லை. என்பது பாரதியார் கருத்து. தமிழ் நாட்டின் பெருமையைப் புத்தம் புதிய முறையில் பாடிய பாரதியார் பாட்டு இந்நாளில் தமிழ் நாடெங்கும் பரவி இன்பம் பயக்கின்றது

"கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு"

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே - தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென் றோர்மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு"

என்ற பாரதியார் பாட்டைக் கேட்கும் மக்களின் உள்ளத்தில் தமிழ் ஆர்வம் வளராது ஒழியுமோ? தேமதுரத் தமிழோசை உலக மெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ற பாரதியார் பாட்டுத் தமிழ் மக்களைத் தட்டி எழுப்பும் தகைமை வாய்ந்ததன்றோ? இத்தகைய இசைப்பாட்டு ஆயிரம் ஆயிரமாக எழுந்து தமிழ்நாடு எங்கும் பரவுதல் வேண்டும். சிலப்பதிகாரக் கவிஞர் காட்டிய நெறியைக் கடைப்பிடித்துத் தமிழ் நாட்டின் இயற்கைச் செல்வங்களாகிய ஆறுகள், அருவிகள், மலைகள், கடல்கள் முதலியவற்றின் அருமை பெருமைகளை இசைப்பாட்டின் வாயிலாகப் பொது மக்களுக்கு வழங்குதல் வேண்டும். சென்னை

மாநகரம் இப்பொழுது தமிழ் மக்களின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்து நிற்கின்றது. தமிழ் நாட்டின் தலைநகரமாகிய சென்னையம்பதி விரிநகர் என்று புலவர் பாடும் புகழுடையதாகும். இந் நகரில் அமைந்த கடற்கரைச் சாலை இவ்வுலகிலுள்ள அருமையான காட்சிகளுள் ஒன்றென்று நாடறிந்தவர் கூறுவர். இத்தகைய சீர்மை வாய்ந்த சாலையைக் குறித்து அருமையான இசைப்பாட்டுகள் தோன்றுதல் வேண்டும். சென்னை அருகேயுள்ள மகாபலிபுரம் என்னும் மாமல்லபுரத்தில் நெய்தலும் குறிஞ்சியும் கொஞ்சி விளையாடும் காட்சி இந்நாட்டார்க்கு மட்டுமன்றி எந்நாட்டார்க்கும் இன்பமளிக்கின்றது. இன்னும் தமிழ்முனிவர் வாழும் பொதிய மலையும், மந்த மாருதம் மகிழ்ந்துலாவும் திருக்குற்றால மலையும் மாந்தர் கருத்தையும் கண்ணை யும் கவரும் அழகு வாய்ந்தனவாகும். இவ்வியற்கைப் பொருள்கள் எல்லாம் இசைப்பாட்டின் வழியாகத் தமிழ் நாட்டிற்கு இன்பம் அளித்தல் வேண்டும்

பழமையான பண்களின் வரலாற்றை ஆராய்வதும் புத்தம் புதிய இசைப்பாடல்களை இயற்றுவதும் இத்தமிழிசைச் சங்கத்தின் அடிப்படையான நோக்கமாகும். இத்தகைய பெரும்பணியை மேற்கொண்ட இச் சங்கம் பல்லாண்டு வாழ்க என மனமார வாழ்த்துகின்றேன்.

இசை நலம் இல்லாத என்னையும் இவ்வரும்பணியில் இசைவித்த செட்டி நாட்டரசர், ராஜா சர், முத்தையா செட்டியார் அவர்களுக்கும் தமிழிசைச் சங்கத்தார்க்கும் என் பணிவார்ந்த வணக்கம் உரியதாகும்.

பொருள் புதிது

பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன்...

https://porulputhithu.com/2022/03/24/tamilvirundhu-rps/

ரா.பி.சேதுப்பிள்ளையின்

‘தமிழ் விருந்து’

முன்னுரை

'சொல்லின் செல்வர்' என்று அழைக்கப்படும் ரா.பி.சேதுப்பிள்ளை (1896- 1961), தமிழ் அறிஞர், எழுத்தாளர், வழக்குரைஞர், மேடைப்பேச்சாளர் எனப் பன்முகம் கொண்ட படைப்பாளி. தமிழ் இலக்கியத்தில் ஆழங்காற்பட்ட புலமை கொண்ட இவர் மேடைச் சொற்பொழிவிலும், கட்டுரை எழுதுவதிலும் மிகவும் பெயர் பெற்றவர். தமிழின் எழுத்து நடை வளர்ச்சியில் இவரது பங்கு குறிப்பிடத்தக்கது. உரைநடையில் அடுக்குமொழியையும், செய்யுள்களுக்கே உரிய எதுகை, மோனை என்பவற்றையும் கொண்டு வந்தவர் இவரே.

சேதுப்பிள்ளை திருநெல்வேலி அருகே ராசவல்லிபுரம் என்ற ஊரில் 1896ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 2ஆம் நாள் பிறவிப்பெருமான் பிள்ளை – சொர்ணம்மாள் ஆகியோருக்கு மகவாகப் பிறந்தார். ஐந்தாண்டு நிரம்பிய சேது உள்ளூர்த் திண்ணைப் பள்ளியில் சேர்ந்து, தமிழ் நீதி நூல்களைக் கற்றார். ராசவல்லிபுரம் செப்பறைத் திருமடத் தலைவர் அருணாசல தேசிகரிடம் இவர் மூதுரை, நல்வழி, நன்னெறி, நீதிநெறி விளக்கம், தேவாரம், திருவாசகம் போன்ற நூல்களைக் கற்றார்.

பின்னர் தனது தொடக்கக் கல்வியைப் பாளையங்கோட்டையில் தூய சேவியர் உயர்நிலைப் பள்ளியிலும், இடைநிலை வகுப்பின் (இன்டர்மீடியட்) இரண்டாண்டுகளை திருநெல்வேலி இந்துக் கல்லூரியிலும், இளங்கலை வகுப்பின் இரண்டாண்டுகளை சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும் பயின்றார்.

1936-இல் சென்னைப் பல்கலைக்கழகம் சேதுப்பிள்ளையை தமிழ்ப் பேராசிரியராக அமர்த்தியது. 25 ஆண்டுக் காலம் சென்னை பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றிய சேதுப்பிள்ளை, தம் எழுத்தாலும் பேச்சாலும் தமிழுக்குப் பெருமையும் தமிழ் உரைநடைக்குச் சிறப்பையும் சேர்த்தார்.

அந்நாளில் சென்னை பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சித் துறைத் தலைவராக பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை பணியாற்றி வந்தார்.

வையாபுரிப்பிள்ளை தொகுத்து வந்த தமிழ்ப் பேரகராதிப் பணி நிறைவேற சேதுப்பிள்ளை துணை நின்றார். வையாபுரிப்பிள்ளையின் ஓய்வுக்குப்பின் இவர் தலைமைப் பதவியை ஏற்றார். அப்போது பச்சையப்பன் கல்லூரி, மாநிலக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் மாணவர்களுக்குச் சிறப்பு வகுப்புகள் நடத்தினார். ஆராய்ச்சி மாணவர்களுக்கு வழிகாட்டியாகத் துணைநின்று உதவினார். இவரின் முயற்சியினால், திராவிடப் பொதுச்சொற்கள், திராவிடப் பொதுப்பழமொழிகள் ஆகிய இரு நூல்களை சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டது.

சேதுப்பிள்ளையின் 'தமிழின்பம்' என்னும் நூலுக்கு சாஹித்ய அகாதெமி விருது வழங்கப்பட்டது. கவியோகி சுத்தானந்த பாரதியார், ரா.பி.சேதுப்பிள்ளையை "செந்தமிழுக்குச் சேதுப்பிள்ளை" என்று பாராட்டினார்.

அடுக்குமொழி, எதுகை, மோனை, இலக்கியத் தொடர் மூன்றையும் உரைநடைக்குள் கொண்டுவந்த சேதுப்பிள்ளையின் பேச்சாற்றலைப் பாராட்டித் தருமபுர ஆதீனம் 1950ஆம் ஆண்டு 'சொல்லின் செல்வர்' என்னும் விருதினை வழங்கியது.

சேதுப்பிள்ளையின் நடை ஆங்கில அறிஞர் ஹட்சனின் நடையைப் போன்றது என்று சோமலே பாராட்டுவார். இவர் தமிழுக்கு ஆற்றிய பணிகளுக்காகச் சென்னை பல்கலைக்கழகம் 'முனைவர்' பட்டம் வழங்கியது. சேதுப்பிள்ளை 1961 ஏப். 25இல் காலமானார். அவரது 'தமிழ் விருந்து' நூல் இங்கு 4 பகுதிகளாக வெளியாகிறது.

<u>நூல் விவரம்:</u>

தமிழ் விருந்து

-ரா.பி.சேதுப்பிள்ளை, பி.ஏ., பி.எல்.

பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.

முதற்பதிப்பு. 1945; பதினைந்தாம் பதிப்பு. 2007

முகவுரை

இலக்கியப் பசி இப்பொழுது தமிழ்நாட்டிற் பரவி வருகின்றது. பசி மிகுந்தவர் எளிய உணவையும் இனிய விருந்தாகக் கொள்வர். அந்த வகையில் வந்தது இத் 'தமிழ் விருந்து'.

தமிழ்க் கலைகளின் தன்மை, தமிழ் இலக்கியத்தின் சீர்மை, தமிழ் மொழியின் செம்மை, தமிழரது வாழ்க்கையின் மேன்மை – இவை நான்கு கூறுகளாக இந் நூலிற் காணப்படும்.

சென்னையிலும், திருச்சிராப்பள்ளியிலும் உள்ள வானொலி நிலையத்தில் நான் பேசிய பதினெட்டுப் பேச்சுகள் இந் நூலிற் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றைச் சேர்த்துக் கொள்ள அனுமதி தந்த இரு நிலையத்தார்க்கும், இந் நூலை வெளியிடுவதற்கு அனுமதி யளித்த சென்னைப் பல்கலைக் கழகத்தார்க்கும் எனது நன்றி உரியதாகும்.

சென்னை, 9-9-'45. – ரா.பி.சேதுப்பிள்ளை

(😊)+++++++++++++++++++ (😊)

உள்ளுறை

I.

1. கலையும் கற்பனையும்
2. புராதனப் போர் – படையெடுப்பு
3. போர்க்களங்கள்
4. ஆகாய விமானம்
5. வாழ்க்கையும் வைராக்கியமும்

II

6. புறநானூறு
7. சிலப்பதிகாரம்
8. மணிமேகலையும் மதுவிலக்கும்
9. நளவெண்பா
10. நகைச்சுவை

III

11. தமிழ் நாட்டாரும் அயல் நாட்டாரும்
12. தமிழ் மொழியும் பிற மொழியும் –தெலுங்கு |
13. தமிழ் மொழியும் பிற மொழியும் – மலையாளம்
14. தமிழ் மொழியும் பிற மொழியும் கன்னடம்
15. இலக்கணம் மொழியைப் பாதுகாக்கும் முறை


IV

16. தமிழ் இலக்கியத்திற் கண்ட அரசு
17. தமிழ் இலக்கியத்திற் கண்ட அமைச்சு ....
18. தமிழ் இலக்கியத்திற் கண்ட தூது
19. தமிழ் இலக்கியத்திற் கண்ட பக்தி
20. தமிழ் இலக்கியத்திற் கண்ட கடவுள்

(‘மணிமேகலையும் மதுவிலக்கும்’ என்பது சென்னை மதுவிலக்குச் சங்கத்தின் (The Hindu God Templars League) ஆண்டுவிழாவிற் செய்த சொற்பொழிவின் சுருக்கம்.)



https://www.tamilvu.org/library/nationalized/pdf/39-sethupillairapi/thamizhakamoorumpaerum.pdf



தமிழகம் ஊரும் பேரும்

ரா. பி. சேதுப்பிள்ளை, பி.ஏ.,பி.எல்.

பழனியப்பா பிரதர்ஸ்

சென்னை - 600 014 திருச்சி - 620 002
சேலம் - 636 001 கோயமுத்தூர் - 641 001
மதுரை - 625 001 ஈரோடு - 638 001

முதற்பதிப்பு : 1946
ஆறாம் பதிப்பு : 1987
ஏழாம் பதிப்பு : 2005

விலை : ரூ.80-00

ஏஷியன் பிரிண்டர்ஸ், சென்னை - 600 014.

முதற் பதிப்பின் முகவுரை

உலகை ஒழுங்கு முறையில் இனிது நடாத்தி வரும் அமைப்புக்கள் பலப்பல. அவைகளுள் உயிர்ப்பாய்த் திகழ்வது ஒன்று. அது நூல் என்பது.

நூலின் உள்ளுறை யாது? அறிவு. ஆதலின், நூல் அமைப்பை அறிவுச் சுரங்கம் என்று கூறலாம்.

நூல்கள் பல திறம். பல திறத்துள் விரவியும், தனித்தும் நிற்பது வரலாறு. வரலாறு வான் போன்றது. வான் மற்றப் பூதங்களிற் கலந்தும், அவற்றைக் கடந்து தனித்தும் நிற்பதன்றோ?

'ஊரும் பேரும்' என்னும் இந் நூல் வரலாற்றின்பாற்பட்டது. இவ் வரலாறு தமிழ் நாட்டின் ஊரையும் பேரையும் விளக்குங் கலங்கரை.

'ஊரும் பேரும்' என்னுந் தலைப்பு விழுமியது. அஃது ஆழ்ந்த பொருளமை யுடையது; சுரங்கம் போன்றது.

'முழுமுதற் பொருள் ஊரில்லாதது - பேரில்லாதது' என்று ஆன்றோர் பலர் அருளிப் போந்தனர். ஊர் பேர் இல்லாத முழுமுதற்கு வழிபாடு நிகழ்ந்து வருகிறதா? இல்லையா? அதற்கு வழிபாடு நிகழ்ந்தே வருகிறது. எப்படி? ஊர் பேராலேயே வழிபாடு நிகழ்ந்து வருகிறது. 'ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணங் கொட்டாமோ' என வருஉந் திருவாசகம் ஈண்டுக் கருதற்பாலது. ஊரும் பேரும் இறைக்குத் தேவையாதலை ஓர்க. ஊர் பேர் மாண்பே மாண்பு!

நாம் வாழும் இவ் வுலகம், இற்றைக்குச் சுமார் இருநூறு கோடி ஆண்டுக்கு முன்னர், பெரிய செஞ்ஞாயிற்றினின்றும் பிளவுண்டு வீழ்ந்த ஒரு சிறிய துண்டு. வீழ்ந்த துண்டு, முதல் ஒரு நூறு

கோடி ஆண்டுவரை அனற்பிழம்பாய்க் கொதிப்புற்றுக் கிடந்தது. பின்னே அது படிப்படியே தணியத் தொடங்கியது. அனல் தணியத் தணிய நிலவகைகள், உயிர் வகைகள் முதலியன தோன்றலாயின. நிலமும் உயிருந் தோன்றியவாறே பிண்டமாய்க் கிடந்திருப்பின், அவை என்றோ பட்டுப் போயிருக்கும். அவை படாமல் வாழ் வடைந்து வருதல் கண்கூடு. காரணம் என்னை? காரணம் பலபடக் கூறலாம். ஈண்டைக்கு ஒன்றைச் சிறப்பாகக் குறித்தல் நலம். அது, நிலமும் உயிரும், 'ஊரும் பேரும்' பெற்றமை என்க. ஊரும் பேரும் உலகை வாழவைக்கும் பெற்றிமையுடையன என்பதை உன்னுக.

இப் பரந்த அழகிய உலகை என்னுள்ளே தொடர்பு படுத்துங் கருவி ஒன்றுள்ளது. அஃது உள்ளம். உள்ளம் ஓர் அகக்கரணம். அது, புலன்கள் வழியே தன் கடனை ஆற்றுகிறது. ஊர் பேர் இல்வழி உள்ளம் என் செய்யும்? அஃது எதனுடன் தொடர்பு கொள்ளும்? எக் கடனை ஆற்றும்? ஊரும் பேரும் இல்லையேல் உள்ளம் உறங்கியே போகும். ஊரும் பேரும் உள்ள நிகழ்ச்சிக்கு இன்றியமையாதன.

வாழ்க்கைக்கு பல துறைகள் தேவை. அவற்றுள் ஆவி போன்றவை ஊரும் பேரும். ஊரும் பேரும் வாழ்க்கையை இயக்கி வளர்ப்பன என்று கூறல் மிகையாகாது. ஊர் பேரால் உலகம் இயங்கல் வெள்ளிடைமலை. ஊர் பேரே உலகம்; வாழ்க்கை; எல்லாம் எல்லாம்.

இன்னோரன்ன சிறப்புக்கள் பல வாய்ந்த 'ஊரும் பேரும்' இந் நூலுக்குத் தலைப்பாய் அமைந்தது. நூலின் பொருண்மையை விளக்கத் தலைப்பொன்றே சாலும். நூலுக்கேற்ற தலைப்பு; தலைப்புக்கேற்ற நூல்.

சில நாடுகளின் ஊரும் பேரும் அடங்கிய ஆராய்ச்சி நூல்கள் வெளி வந்து உலவுகின்றன. அத் தகைய உலாவைத் தமிழ் நாட்டிற் காண்டல் அருமையாயிருந்தது. அவ்வருமையைப் போக்கும் வாய்ப்பு அறிஞர் சேதுப் பிள்ளை அவர்கட்குக்

கிடைத்தது. தமிழ் நாட்டின் தவப் பயனாகும். தமிழ் கொழிக்கும் பொருநைக்கரையில்பிறந்து. தமிழ் பொங்கும் பொதிகைத் தென்றலில் வளர்ந்து, தமிழார்ந்த மனமொழிமெய்களைப் பெற்றுத் தமிழ் வண்ணமாய்த் தமிழ் மொழியும் ஒரு பெருங் கொண்டலிடை உதித்த மின்னொளி இந் நூல், இதைத் தமிழ் நாட்டின் தவப்பயன் என்று சாற்றலாமன்றோ?

ஆசிரியர், நிலம்–மலை–காடு–வயல்–ஆறு–கடல்–நாடு–நகரம்–குடி–படை–கோ–தேவு–தலம் முதலியவற்றை அடியாகக்கொண்டு இந் நூற்கண் நிகழ்த்தியுள்ள ஊர் பேர் ஆராய்ச்சியும், ஆங்காங்கே பொறித்துள்ள குறிப்புக்களும், பிறவும் தமிழ்ச் சரித்திர உலகுக்குப் பெருவிருந்தாகும் என்பதில் ஐயமில்லை. தமிழ் நாட்டில் சில ஊர்ப்பேர்கள் சிதைந்தும் திரிந்தும் மருவியும் மாறியும் தத்தம் முதனிலையை இழந்துள்ளன. அவை மீண்டும் பழைய நிலை எய்திப் பண்புறுதற்கு இந் நூல் பெருந்துணை செய்தல் ஒருதலை. இந் நூலுள் பொலி தரும் சில ஊர்ப்பேர்களின் வரலாறு, சாம்பியும் சோம்பியும் நலிந்தும் மெலிந்துங்கிடக்கும் நம் மக்கட்கு அமிழ்தாகிப் புத்துயிர் வழங்கல் உறுதி. நூலின் நடைக்கண் நடம்புரியும் பீடும் மிடுக்கும் வீறும் நாட்டின் கவலையை நீக்கி, அதன்மாட்டு வேட்கையை எழுப்பி, அதை ஊக்குவனவாம்.

'ஊரும் பேரும்' என்னும் இந் நூல் காலத்துக்கேற்றது என்று சுருங்கச் சொல்லலாம். இவ் விழுமிய நூலைச் செவ்விய முறையில் யாத்து உதவிய ஆசிரியர்க்கு என் வாழ்த்தும் நன்றியும் உரியனவாக. அவர்க்குத் தமிழ்நாடு கடமைப்படுவதாக. இத்தகைய நூல் பல, ஆசிரியர்பால் முகிழ்த்தல் வேண்டுமென்று தமிழ்த் தெய்வத்தை வழுத்துகிறேன். தமிழ் வாழ்க; தமிழ் வெல்க!

சென்னை, திரு. வி. க.

16–7–1946.

நன்றியுரை

சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பாக நடைபெறுகின்ற ஆராய்ச்சிப் பத்திரிகையில் தமிழகத்தில் வழங்கும் ஊர்ப் பெயர்களை வகை செய்து ஆறாண்டுகளுக்கு முன்னே நான் ஒரு கட்டுரை எழுதினேன். இந் நூலுக்கு அதுவே அடிப்படையாகும்.

'ஊரும் பேரும்' உருப்படுதற்குப் பலபடியாக உதவி புரிந்த நண்பர் பலர். சென்னைப் பூங்கோயிற் பள்ளித் தமிழாசிரியர் திரு. பா. சொக்கலிங்கனாரும், பரலி சு. சண்முக சுந்தரனாரும் கையெழுத்துப்படி செய்து தந்தனர். சென்னைப் பல்கலைக் கழகத்துச் சரித்திரப் பேராசிரியர் திரு. வி. ரா. இராமச்சந்திர தீக்ஷிதர் அவர்கள் இதன் வரலாற்றுப்பகுதியைச் சரிபார்த்து உதவினார்கள். தமிழ்ப் பெரியார் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் முகவுரையளித்து அருளினார்கள். சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர் வித்வான் சண்முக வேல னாரும், பவுல் கல்லூரித் தமிழாசிரியர் வித்வான் சுந்தரனாரும் அச்சுப் பிழை திருத்தி உதவினர். புரசையன்பர்கள் திரு. பரந்தாமனாரும், ஜானகிராமனும் பெயரகராதியில் ஒரு பகுதியைத் தொகுத்து உதவினர். அச்சு வேலையைக் கண்ணுங்கருத்துமாய்க் கவனித்துதவினர் திரு. பழனியாரும், நகராண்மைக் கல்லூரித் தமிழாசிரியர் வித்வான் திரு. வடிவேலனாரும். இராஜன் அச்சகத்தார் பல வகையான நெருக்கடிக் கிடையே இதனை விரைவில் நன்றாக அச்சிட்டுத் தந்தார்கள். இவ் வன்பர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை,
30–6–1946.


ரா.பி. சேதுப்பிள்ளை

உள்ளுறை

எண்	பொருள்		பக்கம்
1.	தமிழகமும் நிலமும்	...	1
2.	நாடும் நகரமும்	...	51
3.	குடியும் படையும்	...	59
4.	குலமும் கோவும்	...	93
5.	தேவும் தலமும்	...	165
6.	தமிழகம் – அன்றும் இன்றும்	...	372
7.	இணைப்பு :		
	தமிழ் நாட்டுத் தலங்கள்	...	376
	பெயரகராதி	...	401













Web Links for these Books

01]
https://ta.wikisource.org/wiki/%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%B4%E0%AE%95%E0%AE%AE%E0%AF%8D_%E0%AE%8A%E0%AE%B0%E0%AF%81%E0%AE%AE%E0%AF%8D_%E0%AE%AA%E0%AF%87%E0%AE%B0%E0%AF%81%E0%AE%AE%E0%AF%8D

02] https://www.tamilvu.org/library/nationalized/pdf/39-sethupillairapi/thamizhakamoorumpaerum.pdf

03]
https://archive.org/details/dli.jZY9lup2kZl6TuXGlZQdjZYdjuIy.TVA_BOK_0004026

04]
https://tamildigitallibrary.in/Articles/%E0%AE%A8%E0%AF%82%E0%AE%B2%E0%AF%8D-4026-%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%B4%E0%AE%95%E0%AE%AE%E0%AF%8D%20%E0%AE%8A%E0%AE%B0%E0%AF%81%E0%AE%AE%E0%AF%8D%20%E0%AE%AA%E0%AF%87%E0%AE%B0%E0%AF%81%E0%AE%AE%E0%AF%8D

தமிழகம் ஊரும் பேரும்

ரா.பி. சேதுப்பிள்ளையின் "தமிழகம் ஊரும் பேரும்" நூல், தமிழ்நாட்டின் இடப்பெயர்கள், அவற்றின் தோற்றம் மற்றும் வரலாற்று மாற்றங்கள் குறித்து விரிவாக விளக்கும் சிறந்த ஆவணமாகும். இது இயற்கை, தொழில், அரசர்கள் மற்றும் பண்பாடு அடிப்படையில் ஊர்ப்பெயர்கள் எவ்வாறு உருவாயின என்பதை விவரிக்கிறது. இந்த ஆய்வுத் தகவல்களை தமிழ் இணையக் கல்விக்கழகம் மற்றும் Internet Archive தளங்களில் PDF வடிவில் பதிவிறக்கம் செய்யலாம்.


முக்கிய செய்திகள் மற்றும் ஊர்ப்பெயர் மாற்றங்கள்:

- **பண்டையப் பெயர்கள்:** ஆத்தி மரம் நிறைந்த பகுதி ஆர்க்காடு எனவும், கடம்ப மரம் செறிந்த இடம் கடம்பூர் எனவும் பெயரிடப்பட்டன.
- **மாற்றங்கள்:** காலப்போக்கில் ஆங்கிலேயர் ஆட்சியில் திரிபடைந்த பெயர்கள் (உதா. தூத்துக்குடி -> Tuticorin) மீண்டும் தூய தமிழில் மாற்றப்பட்டுள்ளன (2020-ல் சுமார் 3,000 பெயர்கள்).
- **TNPSC பயிலரங்கு:** இப்பாடம் TNPSC தேர்வுகளுக்கான "தமிழ் அறிஞர்களும் தமிழ்த் தொண்டும்" பிரிவின் கீழ் முக்கிய இடத்தைப் பெறுகிறது.
- **நிர்வாக மாற்றம்:** 2025-ல் 13 புதிய நகராட்சிகள் மற்றும் 25 புதிய பேரூராட்சிகள் உருவாக்கப்பட்டு, ஊர்களின் தரம் மாற்றப்படுகிறது.

PDF பதிவிறக்க இணைப்புகள்:

1. தமிழ் இணையக் கல்விக்கழகம் (TVA) - தமிழகம் ஊரும் பேரும்: http://www.tamilvu.org/library/nationalized/pdf/39-sethupillairapi/thamizhakamoorumpaerum.pdf
2. Internet Archive (Archive.org) - தமிழகம் ஊரும் பேரும்: https://archive.org/details/dli.jZY9lup2kZl6TuXGlZQdjZYdjuly.TVA_BOK_0004026
3. Archive.org - மாற்று இணைப்பு: https://ia801506.us.archive.org/20/items/in.ern

ஆற்றங்கரையினிலே




ரா. பி. சேதுப்பிள்ளை எழுதிய புகழ்பெற்ற பயண இலக்கிய நூல் 'ஆற்றங்கரையினிலே'. இது, தமிழ்நாட்டின் பல்வேறு முக்கிய ஆற்றங்கரைகளில் அமைந்த ஊர்களின் சிறப்புகள், வரலாறு, இலக்கிய நயங்கள் மற்றும் ஆன்மீகச் சிறப்புகளை, ஆசிரியர் அந்த இடங்களுக்கு நேரில் சென்று விவரிக்கும் இனிய தமிழ் நடையில் அமைந்துள்ள கட்டுரைத் தொகுப்பாகும்.

நூலின் சிறப்பம்சங்கள்:

- **பொருள்:** ஆற்றங்கரைகளில் தோன்றி வளர்ந்த நாகரிகம், பண்பாடு மற்றும் மக்களின் வாழ்க்கை முறையை விவரிக்கிறது.
- **படைப்பாளி:** 'சொல்லின் செல்வர்' என்று அழைக்கப்படும் ரா. பி. சேதுப்பிள்ளை.
- **பதிப்பகம்:** பழனியப்பா பிரதர்ஸ்.
- **பொருள் அடக்கம்:** காவிரிக்கரை, பெண்ணைக்கரை, வைகைக்கரை எனப் பல நதிக்கரை நகரங்கள் பற்றிய கட்டுரைகள் உள்ளன.
- **நடை:** இனிய மற்றும் எளிய தமிழ் உரைநடை.

இந்நூல் தமிழ் இலக்கிய ஆர்வலர்களுக்கும், பயணக் கட்டுரைகளை விரும்புபவர்களுக்கும் ஒரு சிறந்த விருந்தாகும்.



ஆற்றங்கரையினிலே

டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, பி.ஏ., பி.எல்., டி.லிட்.

பழனியப்பா பிரதர்ஸ்
'கோனார் மாளிகை'
14, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 600 014.
கிளைகள் :
திருச்சி - 620 002 சேலம் - 636 001
கோயமுத்தூர் - 641 001 மதுரை - 625 001
ஈரோடு - 638 001

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்
உயர்திரு. தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை,
எம்.ஏ., பி.எல். அவர்கள்

அணிந்துரை

சொல்லின் செல்வர் - பேராசிரியர் - டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்களை யான் கடந்த முப்பத்தைந்து ஆண்டுகட்கு மேலாக நன்கறிவேன். அவர்கள் தமிழுக்கு ஆற்றியுள்ள தொண்டின் பண்பையும் பயனையும் தமிழுலகம் நன்கறியும்.

முதன்முதலாகப் பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்களை நான் எங்கள் ஊராகிய திருச்சிராப்பள்ளியை அடுத்துள்ள பூவாளூரில்தான் கண்டேன். அப்போது அவர்கள் திருக்குறள் பற்றிச் செய்த சொற்பொழிவு ஒன்றையும் கேட்டேன். பி.ஏ., பி.எல். பட்டம் பெற்ற ஒருவர் அந்த நாளில் கேட்பவர் கிளர்ச்சி பெறும் வகையில் தமிழைப்பற்றிப் பேசுதல் மிக அருமை. அந்த நிலையில் சேதுப்பிள்ளை அவர்களின் உணர்ச்சி நிறைந்த பேச்சைக் கேட்ட நான் அவர்களிடம் பேரன்பும் பெருமதிப்பும் கொள்ளலானேன். முப்பத்தைந்து ஆண்டுகளுக்குமுன் இவ்வாறு முகிழ்த்த எங்கள் நட்பு மேலும் மேலும் வளர்ந்தது. அதற்குக் காரணம் சேதுப்பிள்ளை அவர்களின் சென்னைப் பல்கலைக் கழக வாழ்க்கையே. அவர்கள் சென்னை மாநகர் வந்தபின் ஒய். எம். சி. ஏ. யிலும் ஒய்.எம்.ஐ.ஏ. யிலும், கந்தகோட்டத்திலும் முறையே சிலப்பதிகாரம், கம்பராமாயணம், கந்த புராணம் ஆகிய

நூல்களை அனைவரும் சுவைத்துப் பயன்பெறும் வகையில் வாரந்தோறும் நிகழ்த்திய பேச்சுகளை நேரில் கேட்கும் பேறு பெற்றேன். அதன் காரணமாகப் பிள்ளை அவர்களிடம் நான் கொண்டிருந்த ஈடுபாடு மேலும் பன்மடங்காகப் பெருகியது. பின்னர், கடந்த பல ஆண்டுகளாகச் சென்னைப் பல்கலைக் கழகப் பாடப் புத்தகக் குழுவில் நான் தலைவனாக இருந்த காலத்தில் அவர்கள் எனக்கு உறுதுணையாக இருந்து என் கடமையைச் செய்யப் பேருதவி செய்தார்கள்.

நமது மதிப்பிற்குரிய டாக்டர் சர். ஏ. எல். முதலியார் அவர்கள் சீரிய தலைமையில் சிறப்புடன் இயங்கும் சென்னைப் பல்கலைக் கழகம் தனது நூற்றாண்டு விழாவில் பேராசிரியர் அவர்கட்கு ' இலக்கியப் பேரறிஞர் ' (Doctor of Letters) பட்டம் வழங்கியபோது நான் பெற்ற இன்பம் அளவிடற்கரியது.

தமிழ்நாட்டு வரலாற்றிலேயே தமிழ்மொழிக்குச் சிறப்பளித்த சான்றோர்களுள் பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவர்கள். அதற்குக் காரணங்கள் இரண்டு; ஒன்று, அவர்களது மொழித் தொண்டு; மற்றொன்று, அவர்களது அருட்கொடை.

பேராசிரியரின் மொழித்தொண்டு தமிழின் சிறப்பை நாடெல்லாம் அறிந்து போற்றச் செய்தது. அவர்களின் அருட்கொடையோ, சென்னைப் பல்கலைக் கழகத்தையும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தையும் சிறப்புறச் செய்து, ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் ஆண்டுதோறும் இப்பல்கலைக் கழகங்களில் நிகழ வழிகண்டது.

பேராசிரியர் அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாகப் பணியாற்றியதைப் போற்றுவதற்காக இவ்விழாக் கொண்டாடப்பெறுகின்றது. இந்த வெள்ளி விழா மலராக

'ஆற்றங்கரையினிலே' என்னும் இவ்வழகிய அரிய நூல் வெளியிடப்பெறுவது மிக்க மகிழ்ச்சிக்குரியது. ஆறுகளே பல்வேறு நாகரிகங்கட்கும் உறைவிடமாய் அமைந்துள்ள பான்மையை உலக வரலாறு உணர்த்தும். இவ்வுண்மையை விளக்குவது இந்நூல்.

'ஆற்றங்கரையினிலே' என்னும் கட்டுரைகள் தமிழ் நாட்டின் புகழ்பெற்ற வார இதழாகிய 'கல்கி' யில் முறையாக வெளிவந்த போது தொடர்ந்து படித்து இன்புற்ற தமிழ்மக்கள் பன்னூறாயிரவர். வார இதழ்களில் தொடர்நிலைக் கதைகளைப் படிப்பவர் பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்களின் **'ஆற்றங்கரையினிலே'** என்னும் கட்டுரைகளை வாரந்தோறும் ஆர்வமுடன் படித்துச் சுவைத்த உண்மையினை நான் அறிவேன். சிறப்பு வாய்ந்த அக் கட்டுரைகள் இப்போது நூல் வடிவில் வெளிவருவது தமிழ்மொழி பெற்ற பெரும்பேறே ஆகும்.

'ஆற்றங்கரையினிலே' என்னும் கட்டுரைகள் பேராசிரியர் அவர்களின் உரைநடையின் இனிமையைச் சிறப்பாகக் காட்டுகின்றன. இலக்கியச் சுவையும் வரலாற்றுச் சிறப்பும் வாய்ந்த இக்கட்டுரைகள் தொண்டை நாட்டின் பழந்தலைநகராகிய காஞ்சி மாநகரம் முதலாக ஈழ நாட்டின் புகழ்பெற்ற தலமாகிய கதிர்காமம் ஈறாக நாற்பத்தெட்டு ஊர்களின் பெருமையைப் பேசும் அருமை உடையன. சிறப்பாக உறையூர், திருச்சிராப்பள்ளி, திருவரங்கம், திருவானைக்கா பற்றிப் பேராசிரியர் அவர்கள் எழுதியுள்ள கட்டுரைகள் அவ்வூர்களோடு நெருங்கிய தொடர்புடைய எனக்குப் பேரின்பம் பயப்பனவாகும். மேலும், **'ஆற்றங்கரையினிலே'** வடநாட்டுப் பதிகளும் ஈழநாட்டுப் பதிகளும் தக்க இடம் பெறுவது தமிழ்ப் பண்பாட்டின் நீர்மைக்கு ஏற்றம் அளிப்பதாகும்.

முத்தமிழின் முழக்கத்தை நாடு முழுவதும் பரப்பும் இந்நூல் தமிழ்த்தாய்க்குச் சிறந்ததோர் அணியாகும். பேராசிரியர் அவர்கள் நூலின் இறுதியில் தொகுத்துக் கொடுத்துள்ள மேற்கோள் பாடல்கள் சுவையறிவார்க்குப் பெருவிருந்தாகும்.

எழுத்திலும் பேச்சிலும் இனிமையைக் குழைத் தூட்டும் பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்கள் தமிழ்த் தாய்க்கு **'ஆற்றங்கரையினிலே'** என்னும் இப்பெறலரும் அணியை உளமுவந்து ஆக்கி அணிவித்ததுபோன்றே இன்னும் பல பணிகளைத் தமது ஓய்வுக் காலத்தில் படைத்தளிக்க அருள் புரியுமாறு இறைவனை வேண்டுகின்றேன். பேராசிரியர் அவர்கள் இதுகாறும் வெளியிட்டுள்ள இருபத்தைந்து நூல்களாலும் தமிழ் மொழி பெற்றுள்ள பெருமை மேலும் அவர்கள் வெளியிடும் நூல்களால் மேன்மை பெறுவதாக ! ஆற்றங்கரை மணலிலும் பலவாக அவர்கள் வாழ்நாள்கள் அமையத் திருவருள் சுரப்பதாக !

- தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை

உள்ளுறை

ஆறும் ஊரும் — 1

I. தொண்டை நாடு

1. காஞ்சி மாநகரம் — 5
2. சென்னை மாநகரம் — 23
3. திருக்காளத்தி — 29
4. திருவேங்கடம் — 34

II. நடு நாடு

5. திருக்கோவலூர் — 40
6. திருவெண்ணெய்நல்லூர் — 48
7. திருப்பாதிரிப்புலியூர் — 54
8. திருவதிகை — 58

III. சோழ நாடு

9. திருவாரூர் — 66
10. புகார் நகரம் — 78
11. உறையூர் — 83
12. திருச்சிராப்பள்ளி — 87
13. திருவரங்கம் — 91
14. திரு ஆனைக்கா — 99
15. தஞ்சை மாநகரம் — 102
16. திருவையாறு — 106
17. பழையாறை — 109
18. கும்பகோணம் — 113
19. சத்திமுற்றம் — 117
20. திருநாகேச்சரம் — 121
21. குரங்காடுதுறை — 124
22. ஆதனூர் — 130
23. திரு ஆப்பாடி — 134
24. அடைக்கல மாதா — 138
25. கருவூர் — 143
26. காரைக்கால் — 147
27. புதுவை மாநகர் — 151

IV. பாண்டி நாடு

28. மதுரை மாநகரம் — 154
29. அழகர் கோயில் — 161
30. பாவைப்பாட்டு — 168
31. திருநெல்வேலி — 174
32. திருக்குற்றாலம் — 179
33. தென்காசி — 184
34. பாவநாசம் — 192
35. ஆழ்வார் திருநகரி — 197
36. செப்பறை — 202
37. முக்கூடல் — 206
38. கொற்கை மாநகரம் — 210
39. காயல் மாநகரம் — 217
40. கயத்தாறு — 223

V. நாஞ்சில் நாடு

41. கோட்டாறு — 227
42. பூதப்பாண்டி — 232

VI. சேரநாடு

43. முசிறி — 236

VII. வடநாடு

44. கோதாவரித் துறை — 240
45. காசி — 245
46. கங்கைத்துறை — 250

VIII. ஈழநாடு

47. மாதோட்டம் — 255
48. கதிர்காமம் — 259

"பின்னிணைப்பு" — 264

காணொளிகள்

01] வண்மையும் வறுமையும்-ரா.பி.சேதுப்பிள்ளை

https://www.youtube.com/watch?v=ip9ZX7Kqx74 [19:14]

02] ஊரும் பேரும் - ரா.பி. சேதுப்பிள்ளை
https://www.youtube.com/watch?v=-sAlrJv6wKA [9:17]

03] இரா.பி.சேதுப்பிள்ளை:R.P.Sedhu Pillai |தமிழ்ச் சான்றோர்| UGC,RB,TNPSC |கற்பது தமிழ்|தமிழச்சி அநுசூயா
https://www.youtube.com/watch?v=bjVhxyehp9Q [11:47]

04] தமிழறிஞர்சொல்லின் செல்வர்டாக்டர். இரா.பி.சேதுப்பிள்ளை அவர்களின் தமிழ்த்தொண்டு
https://www.youtube.com/watch?v=8lrY2i6j93I [19:52]

05] உரைநடை ரா.பி.சேதுப்பிள்ளையின்-வாழ்க்கையும் வைராக்கியமும்-அலகு -2
https://www.youtube.com/watch?v=SxOL_wWXaj0 [12:50]

(😊)(😊) ####### (😊)(😊)



